
# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
3 - NOV 1965
MADRAS



திருமலை யோக நரசிம்ம சுவாமி
சோளிங்கபுரம்.

மாலை 8] விசுவாவசு ஐப்பசி நவம்பர் 1965 [மணி 2

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] விசுவாவசு ஐப்பசி-நவம்பர் [மணி 2


## முருகனின் ஆறுபடை வீடுகள்

**முன்னுரை :**

முருகன் தமிழ்த்தெய்வம், தமிழ்நாட்டுச் சிவாலயங்களிலெல்லாம் முருகப் பெருமான் எழுந்தருளி விளங்குகின்றான். எனினும் முருகனுக்கேயுரிய சிறப்புத் தலங்கள் பலவுண்டு. அவைகளுள்ளும் தொன்றுதொட்டு மிகவும் சிறந்த தலங்கள் எனப் போற்றப் பெறுபவை ஆறு. முருகனின் திருமுகங்கள் ஆறு ஆதல் போல, அவனுடைய சிறந்த தலங்களும் ஆறு எனத் திகழ்கின்றன.

**குமரகுருபரர் :**

முருகனுக்குரிய சிறந்த ஆறு தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்து தொழுவதும், அவனுடைய ஆறெழுத்து மந்திரத்தை இடையறாது ஓதி வழிபடுவதும், மிகச் சிறந்த புண்ணியச் செயல்கள் ஆகும். தன்னுடைய ஆறு தலங்களைத் தரிசித்து வணங்குபவர்களுக்கும், ஆறெழுத்து மந்திரத்தை ஓதி வழிபடுபவர்களுக்கும், முருகப் பெருமான் பெரிதும் தண்ணளி புரிந்து மகிழ்கின்றான்; அவர்களின் சிந்தையிலேயே எப்பொழுதும் பிரிவறக் குடிகொண்டு வீற்றிருந்தருள்கின்றான். இதனை வற்புறுத்தியுணர்த்தும் முறையில்,

> "ஆறு திருப்பதிகண்டு
> ஆறெழுத்தும் அன்பினுடன்
> கூறும் அவர் சிந்தை
> குடிகொண்டோனே"
>
> —கந்தர்கலிவெண்பா.

எனக் **குமரகுருபரர்** கூறுதல் காணலாம்.

**படை வீடுகள் :**

முருகனின் சிறந்த ஆறு திருத்தலங்களையும், "ஆறு **படை வீடுகள்**" எனவும் வழங்குவர். இவ் வழக்காறு பழமையானது அன்றிச் சமீப காலத்தில் தோன்றியதே என்றும் ஒரு சிலர் கூறுவதுண்டு. எனினும் அருள்நந்திசிவம் சிவஞான சித்தியாரிற் குறிப்பிடுதல் போல, முருகன் "**வீரர் வீரன்**" ஆதலானும், முருகனே "**தேவசேனாபதி**" எனப்படுதலானும், 'வீரர்களுக்குள் யான் **சேனானி** (முருகன்) ஆக விளங்குகின்றேன்' எனக் கண்ணபிரான் கீதையில் அருளிச் செய்திருத்தலா

னும், முருகப் பெருமான் எழுந்தருளி யுள்ள தலத்தினைப் "படை வீடு" எனக் கூறுதல் பொருந்துவதேயாகும். படை- படைவீரர்கள், விடுதல் (வீடு) – தங்குதல், எனவே '**படை வீடு**' என்பது படை வீரர்கள் தங்கியுள்ள இடம் எனப் பொருள் பயக்கும்.

**நக்கீரர் :**

இம்முறையில் முருகன் ஆகிய வீரர் வீரனுக்குரிய ஆறு படை வீடுகள், திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்று தோருடல் பழமுதிர்சோலை என்பனவா கும். ஆசிரியர் **நக்கீரர்** தாம் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை என்னும் பழந்தமிழ்ப் பனுவலில், இந்த ஆறு தலங்களையே சிறப்பாக எடுத்துக் குறிப் பிட்டுப் பாடியுள்ளார். ஆதலின் அவருக்குப் பிற்போந்த சான்றோர்கள் அனைவரும் கூட, இந்த ஆறு தலங்களையே சிறந்தனவாகக் கொண்டு தழுவிப் போற்றி மகிழ்ந்துள்ளனர்.

**கச்சியப்பர் :**

காஞ்சிபுரத்திற் குமரகோட்டம் என்னும் முருகன் கோயிலிற் சிவாசாரிய ராக விளங்கித் தமிழிற் கந்தபுராணம் பாடியருளிய கச்சியப்ப சிவாசாரியர், திருமுருகாற்றுப்படையிற் குறிப்பிடப் பெற்றுள்ளபடியே, இந்த ஆறு தலங் களையும் முறையே சிறப்பாகக் கொண்டு போற்றி யிருக்கின்றார். இவ்வுண்மை, கந்தபுராண இறுதியில் அவர்,

"பொய்யற்ற கீரன் முதலாம்
புலவோர் புகழ்ந்த
ஐயற்கு எனது சிறுசொல்லும்
ஒப்பாகும் ; இப் பார்
செய்யுற்றவன் மால் உமை பூசைகொள்
தேவ தேவன்
வையத்தவர் செய் வழிபாடு
மகிழும் அன்றே"

என நினைவு கூர்ந்து சிறப்பித் துரைத் திருக்கும் திறம் கொண்டு தெளியப்படும். இங்ஙனம் நக்கீரரைப் பெரிதும் போற்றிப் பின்பற்றியே, கச்சியப்ப சிவா சாரியர் தமது கந்தபுராணம் கடவுள் வாழ்த்துப் பகுதியில், முருகனைப் போற் றும் இடத்தில், ஆறுபடை வீடுகளையும் வீறுபட அமைத்துப் புகழ்ந்து இன்புறு கின்ருர்.

**துதிப்பாடல்கள் :**

ஒவ்வொரு படைவீட்டின் பெயரையும் பாடலின் ஈற்றடியில் அமைக்கின்ருர் ; அவ்வமைப்பிற் கேற்பச் சொற்பொருள் நலங்களும், எதுகை மோனை முதலிய செய்யுள் அமைதிகளும், பாடலின் ஏனைய மூன்று அடிகளில் இயல்பாக எழிலுறப் பொருந்தும்படி செய்கின்ருர். இத்திறம் எல்லாக் கவிஞர்களுக்கும் இயல்வதொன் றன்று. உயர்ந்த சிறந்த பெருங்கவிஞர் களுக்கு மட்டுமே உரியதொன்ருகும். அழகும் அருமையும் பொருந்த இம்முறை யில் ஆறு படைவீடுகளுக்கும் ஆறு அழகிய துதிப்பாடல்கள், கச்சியப்பராற் கவின்மிகப் பாடப்பெற்றுள்ளன. இவற் றிற்குப் பின்னர், தாம் இருந்து பூசித்து வணங்கி வழிபட்டு வந்த **குமரகோட்டம்** கோயில் பற்றிய துதிப்பாடல் ஒன்றனை யும் பாடி, முருகனை வணங்கியுள்ளார் அவர் !

**ஒருங்கே தரிசனம் :**

மிகச் சிறந்த முருகன் அடியாரும், முருகனின் அருள் பெற்ற முதுபெருங் கவிஞர் பிரானும் ஆகிய கச்சியப்ப சிவாசாரியார், முருகனின் ஆறு படை வீடுகளையும் முறையே பல்காற் சென்று தரிசித்து மகிழ்ந்தனர் போலும்! அங்ஙனம் சென்று வழிபட்டு மகிழ்ந்த தன் பயனுக, அவ்வத் தலத்து மூர்த்தி களை எவ்வெப்பொழுதும் தம் சிந்தையில் தியானித்து இடையருது வழிபடுதற்கு இனிது துணையாகும் வண்ணமே, அவர் இத் துதிப்பாடல்களை அருளிச் செய் தனராதல் கூடும். அவரைப் பின்பற்றி நாமும் காலை மாலை வேளைகளிலோ, இயலும் சமயங்களிலோ இவ்வழகிய இனிய துதிப்பாடல்களைப் பாடித் தியா னித்தால், ஆறு படை வீடுகளையும் ஒருங்கே தரிசனம் செய்த உயர்ந்த பயனை

அடைந்து உய்யலாம். ஆதலின் அப் பாடல்களின் பொருளை ஈண்டுச் சுருங்கக் காண்போம் !

இருப்பரங் குறைத்திடும் எஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றுஅமர் சேயைப் போற்றுவாம்.

(இதன் பொருள்) இரும்பாற் செய்த அரம் என்னும் கருவி கொண்டு அராவிச் செய்யப் பெற்ற கூர்மையான ஈட்டிகளை யுடைய மலைநில வேடர்கள், போர்க்களத்தில் மயங்கி விழுந்தும், பின்னர் உணர்வு பெற்று எழுந்திடுமாறு செய்து, அவர்களுடைய மகள் ஆகிய வள்ளியம்மையார் மீது தான் கொண்டுள்ள மிக்க காதல் விருப்பத்தினை, அங்கே தான் நிகழ்த்திய போரின் கண் அவர்களைக் கொன்றெழிக் காமையினுல் விளங்கும் படி தெளிவாகக் காட்டியருளிய, **திருப்பரங்குன்றம்** என்னும் தலத்தின்கண் விரும்பித் தங்கி வீற்றிருக்கின்ற முருகப் பெருமானை, நாம் துதித்து வணங்குவோம்.

## குறிப்புரை

இரும்பு + அரம் – **இருப்பரம்**; சிலம்பு + அதிகாரம் – சிலப்பதிகாரம் என்பது போல. குறைத்தல்–அராவிச் செய்யப் பெறுதல். எஃகு– கூர்மை. 'வேல்' இங்கு வேடர்களின் **ஈட்டி**யைக் குறித்தது. பொருப்பர் – மலை நிலத்தில் வாழும் வேடர்கள். பொருப்பு–மலை. உணர்வுஉற – தூக்கத்தினின்று எழுவது போல எழுந்திருக்க. வண்டு 'வண்டர்' என வருதல் போல, விருப்பு என்பது '**விருப்பர்**' என எதுகை நோக்கி வந்தது. விருப்பு– காதல். 'விருப்பர் + அங்கு + அமர் + இடை' எனப் பிரிக்க. அமர் –போர், **போர்க்களம். சேய்** – முருகன், செம்மை நிறம் உடையவன்; குழந்தை எனினுமாம். (1)

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்

(இதன் பொருள்) சூரபதுமனை அலைகளையுடைய கடலின்கண் தோல்வியுறச் செய்து, அவனது மார்பைப் பிளந்து ஈரலை வாயிலே இட்டு விழுங்குகின்ற வேற்படையினை ஏந்திக் கொண்டு, மூங்கில்கள் பொருந்தி யிருக்கின்ற வெள்ளி மலையினை விட்டு நீங்கித் **திருச்சீரலைவாய்** என்னும் தலத்தின்கண் வந்து எழுந்தருளியிருக்கின்ற முருகனை, நாம் துதித்து வணங்குவோம்.

## குறிப்புரை

[சூர் – **சூரபதுமன்**. அலைவாய் – கடல். தொலைத்து – தோல்வியுறச் செய்து, வெற்றி கொண்டு. கீண்டு – பிளந்து. 'ஈரலை வாய் இடுதல்' என்பது உலக நவிற்சி; 'கொல்லுதல்' என்னும் பொருளில் வந்தது. எஃகம் – வேற்படை. வேரல் – மூங்கில். வாய்தரு – பொருந்தியிருக்கின்ற. மூங்கில்கள் வளர்தல் என்பது மலைகளுக்கெல்லாம் உரிய பொதுத் தன்மை. அஃது ஈண்டு வெள்ளிமலைக்கும் ஏற்றிக் கவிமரபு பற்றிக் கூறப்பட்டது. வெள்ளி வெற்பு – திருக்கயிலாயமலை. ஓரீஇ – நீங்கி; சொல்லிசை யளபெடை. சிரலைவாய் – **திருச்செந்தூர்** என்னும் தலம்] (2)

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவாம்

(இதன் பொருள்) கற்பகச் சோலையை யுடைய தேவேந்திரன் தனது அரண்மனை பொருந்தி யிருக்கின்ற அழகிய பொன்மயமான **அமராவதி** என்னும் நகரத்தின்கண் மீண்டு வந்து குடியேறவும், சூரபதுமன் ஆகிய அசுரர் தலைவன் மடிந்தொழியவும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் பிரணவம் ஆகிய மந்திரத்தின் சிறந்த பொருளை அறியாமல் மயங்கி விழிக்கவும், திருவாவி நன்குடி என்னும் தலத்தின்கண் எழுந்தருளி விளங்கும் முருகனை, நாம் துதித்து வணங்குவோம்.

[கா–சோலை; ஈண்டுக் கற்பக மரச் சோலையை யுணர்த்திற்று. காவினன்–

தேவேந்திரன். காமர்—அழகிய பொன் நகர் – தேவருலகின் தலைநகரம் ஆகிய அமராவதி. "ஓங்கு அமராவதியோர் தொழச் செல்வதும் உண்மையே" என்பது சம்பந்தர் தேவாரம். மேவுதல் –திரும்பிவருதல். இந்திரன் சூரபதும னுக்கு அஞ்சி ஓடி ஒளிந்திருந்தனன் ஆதலின், 'மேவினன் குடிவர' என்றார். 'குடிவரல்' என்பது உலகவழக்கு. சூர் முதல்—சூரபதுமன் ஆகிய தலைவன்; இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. விளிதல்—மடிதல். இறத்தல். மால் உறல் –மயங்கி விழித்தல். ஆவிநன்குடி என்பது ஆவினன்குடி என எதுகை நோக்கி வந்தது. 'ஆவியர்' என்னும் வீரக் குடிமக்கள் பண்டைக் காலத்தில் வாழ்ந்து வந்த இடமாதலின், இப்பெயர் பெற்றது. திருமகள் காமதேனு சூரியன் நிலமகள் அக்கினி வழிபட்ட தலம் (திரு + ஆ + இனன் + கு + டி) எனவும் பொருள் உரைப்பர். இது பழநியிற் கீழேயுள்ள கோயில். அமலன்–மலம் அற்றவன், கடவுள், முருகன்.] (3)

நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம்.

(இதன்பொருள்) நல்ல நீர்மைகளை யுடைய மனத்தின்கண் தன்னை நினைந்து போற்றி வழிபடுகின்ற அன்பு மிக்க அடியார்கள், பெரிய இவ்வுலகத்தின்கண் சுழன்று அலைந்து வருந்துகின்ற பிறவி யாகிய பெருங்கடலினின்று நீங்கிக் கடக்குமாறு செய்தருள்கின்ற, பிரணவ மந்திரத்தின் வடிவமாக விளங்குகின்ற தலைமைப்பாட்டை அடைந்துள்ள, திருவேரகம் என்னும் தலத்தில் எழுந்தருளி யுள்ள ஆறுமுகங்களையுடைய முருகப் பெருமானின் திருவடிகளைத் துதித்து வணங்குவோம்.

[நீர்மை + அகம்–நீரகம் என வந்தது. நீர்மை—நற்பண்புகள் பலவும் உடைமை. 'நீரின்கண் நின்றுகொண்டு தியானித்துத் தவம் புரிபவர்' எனவும் சிலர் பொருள் கூறுவர். பேரகம்—பெரிய இவ்வுலகம், (பெருமை + அகம்). அலமருதல்—சுழலு தல், வருந்துதல். நீத்திடுதல்-நீந்திக் கடக்கு மாறு செய்தல். நீந்து, தன்வினை. நீத்து பிறவினை. 'நீக்கிடும்' எனவும் சிலர் பாடம் ஓதுவர். தாரகம்—பிரணவம்; 'எல்லாவற்றையும் தரிப்பது, தாங்குவது' என்பது பொருள். முருகன் பிரணவ வடிவம் கொண்டு விளங்குபவன் என்பது கருத்து. "ஓங்காரத்து உள் ளொளிக்கு உள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார், தொழும்பு செய்யார். என் செய்வார் எமதூதருக்கே?" என்பது கந்தர் அலங்காரம். ஏர் + அகம்— அழகிய தலம்; திருவேரகம்; இது சுவாமிமலை எனவும், மலைநாட்டில் உள்ள தொரு கோயில் எனவும் கூறுவர்.] (4)

ஒன்றுதொ ருடலை ஒருவி ஆவிமெய்
துன்றுதொ ருடலைத் தொடங்கி ஐவகை
மன்றுதொ ருடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ ருடிய குமரற் போற்றுவாம்.

(இதன் பொருள்) உயிர்கள் எல்லாம் ஊழிக் காலத்தில் ஒடுங்குந்தோறும் தனது திருநடனத்தினை விடுத்து நீங்கியும், உயிர்கள் எல்லாம் படைப்புக் காலத்தில் உடல் கருவி உலகு நுகர்ச்சி என்பவற்றை அடையுந்தோறும் தனது திரு நடனத் தினை மீட்டும் தொடங்கியும், ஐந்து வகைப்பட்ட மன்றங்களிலும் ஆடியருள் கின்ற வள்ளல் ஆகிய சிவபிரான் உவந்து பெருவிருப்பங் கொண்டு மகிழுமாறு, குன்றுகள் தோறும் எழுந்தருளித் திரு விளையாடல் புரிகின்ற குமாரன் ஆகிய முருகனை, நாம் துதித்து வணங்குவோம்.

[ஒன்றுதல்-சேர்தல், ஒடுங்குதல். ஒருவி- நீங்கி, நிறுத்தி. ஆவி-உயிர். மெய்-உடல். துன்றுதல்-அடைதல். மன்று-பொது இடம், சபை. பொன்மன்று தில்லை, வெள்ளி மன்று மதுரை, மணிமன்று திருவாலங்காடு, செப்புமன்று திருநெல் வேலி, ஓவியமன்று திருக்குற்றாலம். இவ் வைந்து மன்றங்களிலும் சிவபிரான் திருக்கூத்து நிகழ்த்துதலின், சிவபிரானை "ஐவகை மன்று தோறு ஆடிய வள்ளல்" என்றார். குன்று தோருடல் என்பது,

திருத்தணிகை - வள்ளிமலை - கதிர் காமம் என்பர். எல்லா மலைகளையுமே பொது வாகக் குறிக்கும் பெயர் எனவும் கொள ளலாம். கு-குற்சிதம், அருவருக்கத் தக்க பண்புகள். மாரன்-அழித்தருள்பவன். குமாரன்-முருகன்.] (5)

எழமுதி ரைப்புனத்து இறைவி முன்புதன்
கிழமுதிர் இளநலம் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்

(இதன் பொருள்) ஓங்கி வளர்ந்து செழித்த அந்தத் தினைப்புனத்தின்கண் வள்ளியம்மையாகிய இறைவியின் திரு முன்னிலையில், தன்னுடைய உரிமை மிகுந்த இளமைப் பருவத்து இன்பப் புணர்ச்சி கிடைத்தற் பொருட்டு, தனக் குத் தமையன் ஆகிய விநாயகப் பெரு மான் வலிமை மிகுந்த ஆண் யானை வடிவத்தில் வந்து தோன்றுதலை விரும்பி யருளிய, **பழ முதிர் சோலை** என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற அழகிய பகவன் ஆகிய முருகனை, நாம் துதித்து வணங்குவோம்.

[எழுதல்-ஓங்கி வளர்தல், எழு+அ+ முதிரை-எழமுதிரை என வந்தது. அ - அந்த; உலகறி சுட்டு. முதிரை-தினை. முதிரைப் புனம்-தினைப்புனம். தினைப் பயிர் வளர்கின்ற இடத்தைப் **புனம்** என்பது மரபு. 'இறைவி' என்பது பொதுப் பெயராய், ஏற்புழிக் கோடல் என்னும் உத்திபற்றி, ஈண்டு வள்ளியம் மையைக் குறித்தது, கிழமை+முதிர்— கிழமுதிர் என அமைந்தது: கிழமை- உரிமை. கிழப் பருவம் எனினுமாம், இளநலம் - இளமைப் பருவ இன்பம், முன்னவன் - தமையன், விநாயகர். விநாயகர் யானை வடிவில் தோன்றி வள்ளி யம்மையாரை அச்சுறுத்தி முருகனை மணக்கச் செய்தார் என்பது வரலாறு. இதனைத் தமிழ் அகப்பொருள் இலக் கண நூல்கள் **களிறுதரு புணர்ச்சி** என வழங்கும். மெய்யுணர்வு நிலையில் ஞானா சிரியன் தோன்றிப் பிரணவ மந்திர உப தேசம் செய்தலை இந்நிகழ்ச்சி குறிக்கும் எனவும், தத்துவ நுண் பொருள் கொள் ளலாம். **பழமுதிர் சோலை** என்பது மதுரைக்கு அருகே இந்நாளிற் கள்ளழகர் கோயில் என வழங்கும் தலம் என்பர். பழம்+முதிர் சோலை எனவும், பழம்+ உதிர் சோலை எனவும் பிரிக்கலாம்.] (6)

## அருணகிரிநாதர் :

நக்கீரர் ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவர். அவர் அருளிய திருமுரு காற்றுப் படையினை, அவருக்குப் பின்னர் ஏறத்தாழ 1000 ஆண்டுகள் கழித்துத் தோன்றிய கச்சியப்ப சிவாசாரியார் பல கால் ஓதிப் பாராயணம் செய்து பயன் பெற்றார். அதனால் அவர் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையினை அடி யொற்றி, ஆறுபடை வீடுகளையும் முறையே ஆறு பாடல்களால் அழகுறத் துதித்துப் போற்றினர். அக் கச்சியப்ப சிவாசாரியருக்கு ஏறத்தாழ 400 ஆண் டுகள் கழித்துப் பதினைந்தாம் நூற்றாண் டில் பிரபுடதேவமாராயன் காலத்தில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதர், கச்சியப் பரைப் பின்பற்றி ஆறுபடை வீடுகளையும் ஒரு பாடலிலேயே சுருக்கித் தொகுத்துத் துதித்தருள்கின்றார்.

திருவாவி னன்குடி பங்காளர்
எண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானர்
பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி ஏரகம்
குன்றுதொ ருடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்ட
தண்கார் வரை செப்புமினே

— கந்தர் அந்தாதி.

இப் பாடலில் முருகனின் சிறந்த ஆறு தலங்களையும், ஒரு சேர வரிசையாகத் தொகுத்துச் சொல்லியிருப்பது, ஒரு பெருஞ் சிறப்பு, அதற்கும் மேலே மடக்கு அல்லது யமகம் எனப்படும் சொல்ல மைப்புத் திறன் விளங்க, நான்கு அடிக ளிலும் **திருவாவினன்குடி** என்னும் ஒரே சொற்றொடர் எதுகையாக அமைந்து, வெவ்வேறு வகையான பொருள் தரும்படி

செய்திருப்பது, மிகவும் மகிழத் தகுவது. அதன் பொருள் வருமாறு :—

திருமகளுக்கு உயிர்போன்ற திருமாலும், நல்ல மனைவியாகிய உமாதேவியினைத் தம் இடப்பாகத்திற் கொண்டிருக்கும் சிவபிரானும், மதிக்கத் தக்க பழமையான சிறப்புப் பொருந்திய வேதாகமங்களைச் சொல்லிய, சதுரப்பாட்டையுடைய இளம்பூரணன் ஆகிய முருகனுக்கு உறைவிடம் ஆகிய, வானை அளாவிய திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதோருடல், திரளாகச் சென்று பிளிறுகின்றயானைக் கூட்டங்கள் தங்கிக் குடியிருந்து வாழ்கின்ற, குளிர்ச்சியான மேகம் தவழ்கின்ற மலையாகிய பழமுதிர் சோலை, ஆகிய தலங்களைத் துதி செய்யுங்கள்.

[திரு ஆவி-திருமகளுக்கு உயிர்போன்ற திருமால். நன்குடி-நல்ல மனைவி, உமாதேவி. எண் - எண்ணி மதிக்கத்தக்க. முதுசிர்-பழமையான சிறப்பு; அதனையுடைய வேதாகமங்கள். சதிர்+உவாவினன். சதிர்-சதுரப்பாடு, மிக்க திறமை. உவா-பூரண சந்திரன், முழு நிலா. உவாவினன்—முழு நிலாப்போன்ற இளம்பூரணன் என்னும் முருகன். 'வானோர்' என்றும் பாடம், முப்பத்து முக்கோடி தேவர்களும் முருகனைக் காண்டல் குறித்து மண்மிசை வந்து உறைதலாற் "பரங் குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்" என்று பரிபாடல் என்னும் சங்க நூலில், நல்லந்துவனார் என்னும் புலவர் பாடியிருத்தல் கருதி "வானோர் பரங்குன்று" என அருணகிரிநாதர் பாடியதாகக் கொள்ளலாம். தேவேந்திரன் மகள் ஆகிய **தெய்வயானை**யின் திருமணம் நிகழ்ந்த தலமாகலின், தேவர்கள் அங்கு வந்து எப்போதும் உறைகின்றனர் எனலும் பொருந்தும். சென்று+அதிர்+உவா+இனன்+குடிகொண்ட+தண்கார்வரை. இது பழமுதிர் சோலையைக் குறிக்கும் தொடர். அதிர்தல்-பிளிறுதல். உவா-யானை. இனன்-கூட்டம். கார்வரை-மேகம் தவழும் மலை, சோலை என்க.]

## முடிவுரை :

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையினை ஓதியுணர முடியாதவர்கள், கச்சியப்பர் பாடிய ஆறு கவிகளையும் பாடி முருகனைத் துதிக்கலாம். அதுவும் இயலாதவர்கள் அருணகிரிநாதர் அருளிய இவ்வொரு திருப்பாடலையாவது, காலைமாலை வேளைகளில் எப்பொழுதேனும் எவ்விடத்திலேனும் ஓதி முருகனை வழிபடலாம். இவற்றை இயன்ற பெற்றி இடைவிடாமற் பாராயணம் செய்து வருதல், ஆறுபடை வீடுகளையும் ஒருங்கே கண்டு தொழுது வழிபடும் பயனை, நமக்கு நல்கி நலம் செய்யும் என்பது திண்ணம்.

— ஆசிரியர்.

## கோயில் நிகழ்ச்சிகள்.

| | |
|---|---|
| குமாரவயலூர் : | கந்தர் சஷ்டி விழா : (25-10-65—31-10-65) |
| காஞ்சிபுரம் : | குமரகோட்டம் கந்தபுராணச் சொற்பொழிவு, திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார். |
| பழநி : | ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் கந்தர் சஷ்டி விழா. |
| சுவாமிமலை : | சுவாமிநாத சுவாமி தேவஸ்தானம், கந்தர் சஷ்டி விழா. |
| கோடம்பாக்கம் : | வடபழநியாண்டவர் கோயில், கந்தர் சஷ்டி விழா. |
| சென்னை : | முத்தியாலுப்பேட்டை கச்சபேசுரர் கோயில், கந்தர் சஷ்டி விழா. |
| மாயூரம் : | மாயூரநாதசுவாமி கோயில் துலா உற்சவம் (17-10-65—15-11-65), |
| திருநெல்வேலி : | நெல்லையப்பர் கோயில் ஐப்பசித் திருக்கல்யாணத் திருவிழா, (11-10-65 — 25-10-65). |
| திருக்கொள்ளம்பூதூர் : | தீர்த்தோற்சவம், ஓடோற்சவம் (23-10-65 — 24-10-65). |

திருமங்கையாழ்வார் அருளிய

# திருவெழு கூற்றிருக்கை (உரை)

[**முன்னுரை:** சைவத் திருமுறைகளுள் ‘திருவெழு கூற்றிருக்கை’ என்னும் சித்திரகவியினைத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்திருப்பது போன்று, வைஷ்ணவத்தில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின்கண் **திருமங்கையாழ்வார்** அருளிச் செய்துள்ளார். இவர்க்குக் கலியன், கலிகன்றி, பரகாலன், ஆலிநாடன், மங்கைவேந்தன் எனப் பல பெயர்கள் வழங்கும். இவர் திருவாலித் திருநகரியைச் சேர்ந்த திருக்குறையலூரில், கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நன்னாளில் அவதரித்தார். இவர் அருளிச் செய்துள்ள பிரபந்தங்கள் ஆறு. அவை முறையே பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், **திருவெழு கூற்றிருக்கை**, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்பனவாம்.

“மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
ஆறங்கம் கூற அவதரித்தார்”

என்று மணவாள மாமுனிகள், இப்பிரபந்தங்களின் சிறப்பினைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

திருமங்கையாழ்வார் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு வகையான கவிகளிலும் வல்லவர். இவர்தம் கவித்திறம் “**சதுஷ்கவி** ப்ரதாநாய பரகாலாய மங்களம்” என்பதனால் இனிது விளங்கும். இங்ஙனம் நால்வகைக் கவிகளிலும் வல்லவரான பரகாலர் பாடிய “திருவெழு கூற்றிருக்கை” என்னும் சித்திர கவியின் பொருளை, இவ்விதழில் சிறிது ஆராய்ந்து மகிழ்வோம். —ஆசிரியர்]

ஒருபேர் உந்தி இருமலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை ; ஒரு முறை
இருசுடர் மீதினில் இயங்கா, மும்மதிள்
இலங்கை இருகால் வளைய, ஒருசிலை

ஒன்றிய ஈரெயிற்று அழல்வாய் வாளியில்
அட்டனை ; மூவடி நானிலம் வேண்டி,
முப்புரி நூலோடு மான்உரி இலங்கும்
மார்வினில், இருபிறப்பு ஒருமாண் ஆகி,
ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை;

நாற்றிசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி, நால்வாய் மும்மதத்து இருசெவி
ஒருதனி வேழத்து அரந்தையை, ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை ; முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி, அறுதொழில்

அந்தணர் வணங்கும் தன்மையை ; ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து, நான்குடன் அடக்கி,
முக்குணத்து இரண்டவை அகற்றி, ஒன்றினில்
ஒன்றி நின்று ஆங்கு, இருபிறப்பு அறுப்போர்
அறியும் தன்மையை ; முக்கண் நாற்றோள்

ஐவாய் அரவோடு, ஆறுபொதி சடையோன்
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை ;
ஏழுலகு எயிற்றினில் கொண்டனை ; கூறிய
அறுசுவைப் பயனும் ஆயினை ; சுடர்விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை ; சுந்தர

நாற்றோள் முந்நீர் வண்ண ! நின் ஈரடி
ஒன்றிய மனத்தால், ஒருமதி முகத்து
மங்கையர் இருவரும், மலர்அன அங்கையில்
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை ;
நெறிமுறை நால்வகை வருணமும் ஆயினை ;

மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே !
அறுபதம் முரலும் கூந்தல் காரணம்
ஏழ்விடை அடங்கச் செற்றனை ; அறுவகைச்
சமயமும் அறிவரும் நிலையினை ; ஐம்பால்
ஓதியை ஆகத்து இருத்தினை ; அறமுதல்

நான்கு அவையாய், மூர்த்தி மூன்றாய்,
இருவகைப் பயனாய், ஒன்றாய் விரிந்து
நின்றனை ; குன்றா மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை, வருபுனற் பொன்னி
மாமணி அலைக்கும், செந்நெல்ஒண் கழனித்

திகழ்வனம் உடுத்த, கற்போர்ப் புரிசைக்
கனக மாளிகை நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும், செல்வம் மல்குதென்
**திருக்குடந்தை,** அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க, ஆடரவு அமளியில் அறிதுயில்

அமர்ந்த பரம! நின் அடியிணை பணிவன்.
வரும்இடர் அகல, மாற்றோ வினையே !

ஒரு பேர்—ஒப்பற்ற பெரிய
உந்தி—திருநாபியில் தோன்றிய
இருமலர்த் தவிசில்—பெரிய தாமரைப்பூ ஆகிய ஆசனத்தில்
ஒருமுறை அயனை ஈன்றனை—ஒரு காலத்தில் பிரமனைப் படைத்தருளினாய். (1)

ஒருமுறை—முன் ஒரு காலத்தில்
இரு சுடர்—சந்திரனும் சூரியனும் ஆகிய இரண்டு சுடர்களும்
மீதினில் இயங்கா—மேலே உலவ முடியாத
மும்மதில்—நீர் அரண், மலையரண், காட்டரண் என்றும் மூன்று மதில்களையுடைய
இலங்கை—இலங்கைமா நகரினை
இருகால் வளைய—இரண்டு நுனிகளும் வளையும்படி
ஒரு சிலை—ஒப்பற்ற கோதண்டம் என்னும் வில்லில், (2)

ஒன்றிய ஈர் எயிற்று—பொருந்திய இரண்டு பற்களையுடைய
அழல் வாய்—நெருப்பைக் கக்குகின்ற வாயையுடைய
வாளியின் அட்டனை—அம்பினால் அழித்தருளினாய்.
மூஅடி—மூன்று அடியளவு
நானிலம் வேண்டி—பூமியை விரும்பி
முப்புரி நூலொடு—மூன்று புரிகளாக அமைந்த பூணூலுடன்
மான் உரி இலங்கும்—மானின் தோல் விளங்குகின்ற
மார்பினின்—திருமார்பினையுடைய
இரு பிறப்பு ஒருமாண் ஆகி—ஒப்பற்ற பிராம்மணப் பிரம்மச்சாரியாக வடிவெடுத்து (3)

ஒருமுறை—ஒரு காலத்தில்
ஈர் அடி—இரண்டு திருவடிகளாலே
மூவுலகு அளந்தனை—மூன்று உலகங்களையும் அளந்து கொண்டாய்.
நாற்றிசை நடுங்க—நான்கு திசையிலும் உள்ளவர்கள் நடுங்கும்படி
அஞ்சிறைப் பறவை ஏறி—அழகிய சிறகையுடைய கருடன்மேல் ஏறிக்கொண்டு வந்து
மும்மதம்—கன்னமதம் கபோலமதம் பீஜமதம் என்னும் மூன்று மதங்களையும்
இருசெவி—முறம் போன்ற இரண்டு செவிகளையும் உடைய
ஒருதனி வேழத்து—ஒப்பற்ற சிறந்த யானையாகிய கஜேந்திரனின்
அரந்தையை—துன்பத்தை (4)

ஒருநாள்—முன்னொரு காலத்தில்
இருநீர் மடுவுள் தீர்த்தனை—பெரிய நீரையுடைய மடுவின்கண் போக்கியருளினாய்.
முத்தீ—ஆகவநீயம் தட்சிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று நெருப்புகளையும்
நான்மறை—இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும்
ஐவகை கேள்வி—பிரமவேள்வி தேவவேள்வி பூதவேள்வி பிதிர்வேள்வி மனிதவேள்வி என்னும் ஐந்து வகையான வேள்விகளையும்
அறுதொழில்—ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு வகையான தொழில்களையும் உடைய
அந்தணர் வணங்கும் தன்மையை—அழகிய தண்மை வாய்ந்த சான்றோர்கள் வணங்குகின்ற சிறப்பினைப் பெற்றுள்ளாய்.
ஐம்புலன்—மெய்வாய் கண்மூக்கு செவி என்னும் ஐந்து பொறிகளையும்

அகத்தே செறுத்து—வெளியே செல்ல விடாமல் இறைவனையே நினைந்து உள்ளே அடக்கி வைத்து

நான்கு உடன் அடக்கி—உண்ணுதல் உறங்குதல் அஞ்சுதல் நுகர்தல் என்னும் தொழில்களையும் ஒரு பொருட்டாக மதியாமல் விலக்கித் தள்ளி

முக்குணத்து—சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களிலே

இரண்டு அவை அகற்றி—இராசதம் தாமதம் என்னும் இருகுணங்களையும் நீக்கி

ஒன்றினில்—சத்துவம் ஆகிய ஒரு குணத்திலேயே (5)

ஒன்றி நின்று—பொருந்தியிருந்து

ஆங்கு—அத்தகைய நிலையின் பயனாக

இருபிறப்பு அறுப்போர்—நல்வினை தீவினை என்னும் இரண்டினாலும் வரும் உலகியல் வாழ்வு ஆகிய பற்றினை அறுத்துக் கொள்ளுகின்ற பெரியோர்களாலே மட்டும்

அறியும் தன்மையை—அறிந்து கொள்ளத்தக்க பெருமையினைக் கொண்டுள்ளாய்.

முக்கண்—மூன்று கண்களையும்

நால் தோள்—நான்கு தோள்களையும்

ஐவாய் அரவோடு—ஐந்து தலைகளையுடைய பாம்பையும்

ஆறு பொதி சடையோன்—கங்கையாறு தங்கியுள்ள சடையினையும் உடைய சிவபெருமான்

அறிவு அரும்—அறிவதற்கு அரிய

தன்மைப் பெருமையுள் நின்றனை—இயல்புடைமை ஆகிய பெருமையிலே விளங்குகின்றாய்.

ஏழ் உலகு—நாவலந்தீவு இறலித்தீவு குசைத்தீவு கிரவுஞ்சத்தீவு சான்மலித்தீவு தெங்கின்தீவு புட்கரத்தீவு என்னும் எல்லா உலகங்களையும்

எயிற்றில் கொண்டனை—வராக அவதார காலத்தில் பற்களாகிய கோட்டின் கண் எடுத்துக் கொண்டு காப்பாற்றினாய்.

கூறிய—புகழ்ந்து சொல்லப்பெற்ற

அறுசுவைப் பயனும் ஆயினை—உவர்ப்பு புளிப்பு துவர்ப்பு இனிப்பு கார்ப்பு கைப்பு என்னும் ஆறுசுவைகள் ஆகிய பயன் ஆகவும் திகழ்கின்றாய்.

சுடர் விடும்—ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற

ஐம்படை—சங்கு சக்கரம் கதை வில் வாள் என்னும் ஐந்து ஆயுதங்களையும்

அமர்ந்தனை—விரும்பி ஏந்தியிருக்கின்றாய்.

சுந்தர நால் தோள்—அழகு மிக்க நான்கு தோள்களையும்

முந்நீர் வண்ண—ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்று நீர்களைக் கொண்ட கடல் போன்ற நீல நிறத்தை யுடையவனே !

நின் ஈர் அடி—நின்னுடைய இரண்டு திருவடிகளையும்

ஒன்றிய மனத்தால்—ஒருமைப் பட்டு நிற்கும் மனத்துடன் (6)

ஒரு மதிமுகத்து—ஒப்பற்ற சந்திரனைப் போன்ற அழகிய முகத்தையுடைய

மங்கையர் இருவரும்—திருமகள் நிலமகள் ஆகிய இருவரும்

மலர் அன அங்கையின்—பூப் போன்று மெல்லிய அழகிய கைகளாலே

முப்பொழுதும்—காலை மாலை நடுப்போது என்னும் மூன்று வேளைகளிலும்

வருட—இசைவாகப் பிடித்துத் தைவருதல் செய்ய

அறிதுயில் அமர்ந்தனை—இன்பமாக யோக நித்திரை புரிகின்றாய்.

**நெறி முறை**—உலகியல் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப

**நால்வகை வருணமும் ஆயினை**—அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்கு வகையான பாகுபாடுகளையும் அமைத்துவைத்து நடத்துகின்றாய்.

**மேதகும்**—மேன்மை பொருந்திய

**ஐம்பெரும் பூதமும் நீயே**—நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐந்து பெரிய முதற்பொருள்களையும் நீயே இயக்குகின்றாய்.

**அறுபதம் முரலும்**—ஆறு கால்களையுடைய வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற

**கூந்தல் காரணம்**—அழகிய கூந்தலையுடைய நப்பின்னையின் காரணமாக

**ஏழ் விடை**—ஏழு காளை மாடுகளையும்

**அடங்கச் செற்றனை**—அடங்கும்படி செய்து வலிமைகெடுமாறு நெரித்தருளினாய்.

**அறு வகைச் சமயமும்**—நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாஞ்சை வேதாந்தம் என்று பலவாறாகச் சொல்லப்படும் ஆறுவகையான சமயங்கள் எல்லாம்

**அறிவு அரும் நிலையினை**—அறிந்து கொள்ளுதற்கு இயலாத அரிய நிலையில் வைகித் திகழ்கின்றாய்.

**ஐம்பால் ஓதியை**—மென்மை தண்மை நறுமை கருமை நீட்சி என்னும் ஐந்து வகையான இயல்புகளும் அமைந்த கூந்தலையுடைய திருமகளை

**ஆகத்து இருத்தினை**—மார்பின்கண் தரித்துக் கொண்டு இருக்கின்றாய்.

**அறம் முதல் நான்கு அவையாய்**—அறம் பொருள் இன்பம் வீடுபேறு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் வழங்குபவனாய்

**மூன்று மூர்த்தியாய்**—படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில் களையும் செய்கின்ற மும்மூர்த்திகளின் வடிவமாய்

**இருவகைப் பயனாய்**—இன்பம் துன்பம் என்னும் இருவகையான பயன்களையும் அவரவர் வினைகளுக்கு ஏற்பத் தருபவனாய்

**ஒன்றாய் விரிந்து நின்றனை**—ஒரே முழுமுதற் பரம் பொருளாக இருந்தும் உலகம் முழுவதிலும் பரவி நீக்கமற நிறைந்து நிற்கின்றாய். (7)

**குன்றா மதுமலர்ச் சோலை**—குறையாத தேன்துளிகளையுடைய பூக்கள் நிறைந்த சோலைகளையும்

**வண் கொடிப் படப்பை**—வளப்பம் நிறைந்த பலவகைக் கொடிகளையுடைய தோட்டங்களையும்,

**வருபுனற் பொன்னி**—பெருகி வருகின்ற நீரையுடைய காவிரியாறனது

**மாமணி அலைக்கும்**—சிறந்த மாணிக்கங்களை அலையெறிந்து கரையிற் கொழிக்கப் பெறுகின்ற

**செந்நெல் ஒண் கழனி**—செந்நெற் பயிர்களாலே சிறப்புப் பெற்ற வயல்களையும் உடையதாய்,

**திகழ் வனம் உடுத்த**—விளங்குகின்ற அழகிய தோப்புக்களை நாற்புறமும் உடைபோல அணிந்திருக்கின்ற,

**கற்போர் புரிசெய்**—கற்றுவல்ல புலவர்களுடைய நகரமாகச் செய்து அமைக்கப் பெற்றதும்

கனக மாளிகை நிமிர் கொடி—பொன்மயம் ஆகிய மாட மாளிகைகளின் மேலே நிமிர்ந்து ஓங்கியுயர்ந்துள்ள கொடிகள்

விசும்பில் இளம்பிறை துவக்கும்—வானத்தின்கண் உள்ள மூன்றும் பிறைச் சந்திரனைத் தொட்டுக் கொண்டிருப்பதும் ஆகிய

செல்வம் மல்கு தென் திருக்குடந்தை—நீர்வளம் நிலவளம் முதலிய செல்வங்கள் பலவும் நிறைந்து தெற்கேயுள்ள அழகிய திருக்குடந்தை என்னும் தலத்தின்கண்

அந்தணர்—பிராம்மணர்கள்

மந்திர மொழியுடன்—வேத மந்திரங்களைக் கூறிக் கொண்டு

வணங்க—வழிபட்டு மகிழும்படி

ஆடு அரவு அமளியில்—படம் எடுத்து ஆடுகின்ற ஆதிசேடன் ஆகிய படுக்கையில்

அறிதுயில் அமர்ந்த—யோகநித்திரை செய்தலை விரும்பிய

பரம—மேலான முழுமுதற் பொருளே!

வரும் இடர் அகல—இவ்வுலகியல் வாழ்வில் நேரக்கூடிய எல்லாத் துன்பங்களும் நீங்கும்படி

நின் அடி இணை பணிவன்—நினது திருவடிகள் இரண்டையும் பணிந்து வணங்குகின்றேன்.

வினை மாற்று—என்னுடைய தீவினைகளைப் போக்கியருள்க. —ஆசிரியர்.

சீரார் திருவெழு கூற்றிருக்கை என்னும் செந்தமிழால்
ஆரா அமுதன் குடந்தைப் பிரான்றன் அடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ் வுலகுய்யவே
சோராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணைநமக்கே.

—உடையவர் அருளிய தனியன்.

---

## ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்.

4—10—1965 கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி — கனம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படுதல்.

4—10—1965 தேரூர் (கன்னியாகுமரி மாவட்டம்) ஸ்ரீ அழகிய சோழநங்கை அம்மன் ஆலயம் — தேவாரப் பாடல் பயிற்சி பெற்ற சிறுவர், சிறுமியர்க்குப் பரிசுகள் வழங்கல்.

5—10—1965 நாகர்கோயில் இந்து சமய இணைப்பு மாநாட்டில் தலைமை வகித்தல்.

5—10—1965 (1) திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான சாஸ்தா கோயில் நீர்ப்பாசனக் கிணறு செயல்படுதலை ஆரம்பித்து வைத்தல்.

(2) தேவஸ்தானக் குடிநீர்க் கிணற்றைத் திறந்துவைத்தல்.

(3) தெப்பக்குளப் படித் திருப்பணிக் கல்நாட்டுவிழா.

,, கன்னியாகுமரி மாவட்டம் — வெள்ளிமலை — ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம்— புதிய பஜனைக்கூடக் கட்டடத்தைத் திறந்து வைத்தல்.

# திருவாசகத்தின் சிறப்பியல்புகள் சில

**முன்னுரை :**

அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியின்கண் உள்ள அரும் பெறல் நூல்கள் பலவற்றுள், சமயத் துறையில் ஒப்புயர்வற்ற தொன்றெனச் சிறந்து திகழ்வது திருவாசகம். "ஓதி ஓதி யுணருந்தோறும் உணர்ச்சி யுதவும்" தெய்வ நலஞ் சான்ற சிறப்பின் மிக்கது திருவாசகம். தமிழ் நாட்டில் தோன்றி யருளிய சான்றோர்கள் பலர், திருவாசகத் தினைத் தம் உயிரினும் இனிய மிக மேலான அருளியல் நூலாகப் போற்றிப் பாராட்டியுள்ளனர். வேறு பிற எந்தச் செந்தமிழ் நாலுக்கும் அமையாமல், திருவாசகத்திற்கு மட்டுமே வாய்த்துள்ள சிறப்பியல்புகள் பல. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கு ஆராய்ந்து இன்புறுவோம்.

**உருக்கத் தன்மை :**

திருவாசகத்தின் சிறப்பியல்புகளுள் மிகவும் முதன்மையானதும் மேலானது மாகக் கிளந்து குறிப்பிடற் பாலது, கனி வும் கசிவும் மிக்க அதன் உருக்கத் தன்மையாகும். சிவபெருமான் "தப்பா மே தாள் அடைந்தார் **நெஞ்சுருக்கும் தன்மையினான்**" ஆதல் போல, நம் அருமைத் திருவாசகத் திருமறையும் தப்பாமே ஓதுவோர் நெஞ்சுருக்கும் தன்மை வாய்ந்தது. தன்னை ஓதுவோர் கன்னெஞ்சமெலாம் கரைந்துருகச் செய் யும் பெற்றிமை மிக்கது திருவாசகம். கற்றார் கல்லார் என்னும் எல்லார் உள்ளங்களினும் நெகிழ்ச்சியை யுண் டாக்கி உருக்கம் விளைவித்தற்கண், வேறு பிற எந்நூலும் திருவாசகத்திற்கு இணை யாகாது என்பது அறிஞர் அனைவரும் ஒருமுகமாக உடன்பட்ட தொன்று, 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாச கத்திற்கும் உருகார்' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. '**வாக்கிற்கு அருண கிரி, வாதவூரர் கனிவில்**' என்பது சான் றோர் ஒருவரின் மதிப்பீடு.

> திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்
> கருங்கல் மனமும் கரைந்துகக், கண்கள்
> தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய,
> மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
> அன்பர் ஆகுநர்......

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து போற்றியுள்ளமை யினை அனைவரும் அறிவர்.

> மனங்கரைத்து மலங்கெடுக்கும்
> வாசகத்தின் மாண்டோர்கள்,
>
> கனஞ்சடைஎன் றுருவேற்றிக்
> கண்மூடிக் கதறுவரே?

எனப் பேராசிரியர் மனோன்மணியம் **சுந்தரம் பிள்ளை** அவர்கள் அருளிச் செய் திருக்கும் பொருளுரையும் இவ்வுண்மை யினை இனிது வலியுறுத்தும். திருவாச கத்தின் இவ்வுருக்கத் தன்மையினைச் செவ் விதின் விளக்கும் சில தொடர்கள் வருமாறு :

1. புன்மையேனை ஆண்டு ஐயா புறமே போக விடுவாயோ?
2. தேசனே அம்பலவனே செய்வது ஒன்றும் அறியேனே.
3. என்னை நோக்குவார் யாரே? என் நான் செய்கேன்? எம்பெருமான்!
4. எந்தாய்! எங்குப் புகுவேனே?
5. அடியேன் அல்லேன் கொல்லோ? தான் எனை ஆட்கொண்டிலை கொல்லோ?
6. சகந்தான் அறிய முறையிட்டால் தக்கவாறு அன்று என்னாரோ?
7. அருளாது ஒழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆர் இங்கு?

8. செத்தே போனுற் சிரியாரோ?

9. நரிப்பாய் நாயேன் இருப்பேனே?

10. அடியேனும் அயலார் போல அயர்வேனே?

11. அழுமதுவே யன்றி மற்று என்செய்கேன்?

12. யாது நீ போவதோர் வகை எனக்கு அருள்வாய்?

13. ஐயனே என்று உன் அருள்வழி இருப்பேன்.

14. என்செய்கேன்? இது செய்க என்று அருளாய்!

15. சேயனுகிநின்று அலறுவது அழகோ?

16. அடியனேன் இடர்ப்படுவதும் இனிதோ?

17. ஆரோடு நோகேன், ஆர்க்கு எடுத்துரைக் கேன், ஆண்ட நீ அருளிலையானுல்?

18. பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ?

19. முறையோ என்று அழுதால் அருளாது ஒழிவதே?

20. திகைத்தால் தேற்ற வேண்டாவோ?

21. புறம் போகேன், புறம்போகல் ஒட்டேனே.

22. பிரியேன் என்றென்று அருளிய அருளும் பொய்யோ?

23. படுவேன் படுவதெல்லாம் நான் பட்டால், பின்னைப் பயன் என்னே?

24. நடுவாய் நில்லாது ஒழிந்தக்கால், நன்றே எங்கள் நாயகமே?

25. சவலையாய் நாயேன் கழிந்து போவேனே?

26. தயாநீ என்பால் இல்லையே!

27. நாயேன் அடிமை யுடனுக ஆண்டாய், நான்தான் வேண்டாவோ?

28. கொடியேன் கெடவே அமையுமோ?

29. ஆவா என்னுவிடில் என்னை, அஞ்சேல் என்பார் ஆரோதான்?

30. சாவார் எல்லாம் என் அளவோ, தக்கவாறு அன்று என்னுரோ?

என்பன போன்று பலபட வரும் இத் தொடர்கள், எத்துணை உருக்கத்தன்மை மிகுந்துள்ளன. திருவாசகத்தின்கண் இடையிடையே இவ்வாறு பயன்றுவரும் தொடர்கள் பலவற்றின் இடங்களையும், அவற்றின் முன்பின் இயைபுகளையும், அரிய பொருள் நலங்களையும் எண்ணி எண்ணிப் பார்க்கலுறின், எத்தகைய கல்நெஞ்சமும் கரைந்துருதம் என்பதில் ஐயம் உண்டோ?

## அயரா அன்பு:

திருவாசகத்தின்கண் காணப்படும் சிறப்பியல்புகளுள், அதன் அயரா அன்புத் திறனும் ஒன்ருகும். அன்பே உயிருணர்ச்சி கள் அனைத்தினும் தலைசிறந்ததும், தெய் வத்தன்மை வாய்ந்ததுமாகத் திகழ் கின்றது. அன்புணர்ச்சி மேலோங்க மேலோங்க, ஏனைத் தீய உணர்ச்சிகள் தேய்ந்து சிதைந்தொழிய, மனிதன் இறை நிலைக்கு முறை முறையே உயர்ந் துயர்ந்து செல்லுகின்ருன். இத்தகைய அன்புணர்ச்சி யினையே முதலும் இடையும் முடிவுமாம் அடிப்படைப் பொருளாகக்கொண்ட நூல் திருவாசகமே எனின், அதன் சிறப்பிற்குக் காரணம் கூறுதல் வேண்டுமோ என்பது?

திருவாசகத்தின் பொருள் அன்பே வடிவமான சிவம்; திருவாசகத்தைப் பாடி யவர் அன்பின் பிழம்பே எனத்தகைய மாணிக்கவாசகர்; திருவாசகப் பாடல்கள் அன்புணர்ச்சி பெருக்கு எடுத்தோடும் அரும்பெறற் கவிதை வெள்ளம் எனின், வேறு பிறிது கூறுவது யாதுளது? திரு வாசகம் போல வேறு பிறிதொரு நூலும் அன்பினை வலியுறுத்தி அடுத்தடுத்துக் குறிப்பிட்டுப் பலபடியாக எடுத்துமொழிந் திருத்தலை, நாம் யாண்டும் காண்கிலம்.

1. நின்றன் வார்கழற்கு அன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய்.

2. அன்பு நின்கழற்கணே புணர்ப்பதாக.

3. வேண்டும் நின் கழற்கண் அன்பு.

4. இல்லை நின்கழற்கு அன்பது என்கணே.

5. இடையரு அன்பு உனக்கு என் ஊடகத்தே நின் றுருகத் தந்தருள்.

7. ஆடுகின்றிலை கூத்து உடையான் கழற்கு அன்பு இலை.

7. அலவா நிற்கும் அன்பு இலேன்.

8. நெகும் அன்பு இல்லை நினைக்காண.

9. மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன் யான்.

10. அணியார் அடியார் உனக்குள்ள அன்பும் தாராய்.

11. யானே பொய் என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்.

12. நான் தனக்கு அன்பு இன்மை நானும் தானும் அறிவோம்.

13. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இன்மை கண்டபின்.

14. மெய்கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆக வேண்டுமே.

15. தொண்டனேற்கும் உண்டாங்கொல் வேண் டாது ஒன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே.

என்றிங்ஙனம் அடுத்தடுத்துப் பலகாலும் அன்பினைப் பற்றித் திருவாசகம் எண்ணிறந்த பல இடங்களிற் குறிப்பிடுமாறு போலத் தமிழ்நூல் பிறிதொன்றும் குறிப்பிடுகின்றிலது.

மாணிக்கவாசகர்போல, இறைவன்பால் தமக்கு அன்பு சிறிதும் நிகழ்கின்றிலதென்றும், தமது அன்பு வெறும் பொய்யன்பே மெய்யன்பு அன்று என்றும், இறைவனே தமக்கு மெய்யன்பு நிகழுமாறு அருள் புரிதல் வேண்டும் என்றும், அன்பால் அகங்குழைந்துருகி அழுதழுது அரற்றிப் புலம்பிப் பாடிய உண்மையன்பர் வேறு பிறர் எவரும் இலர். ஆதல்பற்றியே கவிஞர்களுள் 'கற்பனைக் களஞ்சியம்' என்னும் சிறப்பியற் பெயர் எய்திய துறைமங்கலம் சிவப்பிரகாசர்,

"அருங்கவி வாத வூரனே முதலோர்
அன்பிலேம் என்றது வேண்டி
இரங்குதல் பொய்மை; அன்பிலேன் எனயான்
இயம்பலே மெய்; எனக்கு அருளாய்..."

— சோணசயிலமாலை.

என்று மிக நயம்பட இனிதருளிச் செய்தனர். இவ்வாற்றால் திருவாசகம் அன்பினையே அடிப்படையாகக் கொண்ட பேரிலக்கியமாதல் தெளியலாம்.

**தாழ்வெனும் தன்மை :**

திருவாசகத்தின் சிறப்பியல்புகள் பல வற்றுள் அதன்கட் பெரிதும் காணப்படும் தாழ்வெனும் தன்மையும் ஒன்றாகும்,

"வாழ் வெனும் மையல் விட்டு
வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மை யோடு
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது..."

—சிவஞான சித்தியார்

என அருள்நந்திசிவனார் கூறுதலின், சைவ சமயத்திற்குத் தாழ்வெனும் தன்மை மிக மிக இன்றியமையாததென்பது பெறப்படும். இத் தாழ்வெனும் தன்மை அறிவின் உயர்ந்து தம் குற்றங்குறைகளைத் தாமே கண்டுணர வல்ல நல்லார்க்கே அமைவதாகும், ஏனையோர் அதனை வாய்ப்பப்பெறாது செருக்கும் சினமும் சிறுமையும் உற்றுச் சிதைந் தொழிவர். ''நான் எனது குற்றங் குறைகளை என் உள்ளம் வருந்தும் அளவிற்கு நன்றாக உணர்ந்திருக்கிறேன். அங்ஙனம் உணர்ந்திருப்பதில்தான் யான் பெற்றுள்ள ஆற்றலெல்லாம் அமைந்துகிடக்கின்றது! ஏனெனில், ஒரு மனிதனுக்குத் தன் குற்றங் குறைகளைத் தானே உணர்ந்துகொள்ளப் பெறுதல்தான், ஓர் அரும் பெருஞ் செயல் ஆகும்'' என வரும் காந்தியடிகள் கூற்றும், ஈண்டு நினைவுகூரற்பாலது (1).

இங்ஙனம் தமது குற்றங் குறைகளைத் தாமே உணரவல்ல பெருமக்களே "குறைவிலா நிறைவாய்க் கோதிலா அமுதாய்க் குணப்பெருங்கடலாய்'' விளங்கும் இறைவனின் அருமை பெருமைகளை யுணர்ந்து அவனை வழிபட்டுய்யும் பெறலரும் பேறு பெறுவர். இறைவனின் அருளை அடையப்பெற்று, அவனை நேரிற் கண்ணாரக்

(1) "I am painfully conscious of my imperfections and therein lies all the strength I possess, because it is a rare thing for a man to know his own limitations..."

—*Mahatma Gandhiji*

கண்டு, அவற்றின் அளப்பரும் பெருமை களை அறிந்துணர்ந்தோர்க்கே தமது சிறுமையும் புன்மையும் இழிவும் இனைய வென முழுவதும் தெரிந்து தெளிதல் இயலும். அதனுல்தான் ஞானிகள் அனை வரும், அவர்கள் பலவேறு காலங்களில் பலவேறு நாடுகளில் தோன்றியவர்களாக இருந்த போதிலும், ஒரே மனத்தினராய்த் தம்முள் வேறுபாடு எதுவும் இன்றி, தம்மைப் பலவகைகளில் தாழ்த்திப் பழித்துக் கொள்ளுதலைக் காண்கிறோம். (2) 'எல்லாவகையான இன்பநுகர்ச்சி களையும் வெறுத் தொதுக்கி விடும் ஞானிகள், தம்மைத் தாழ்த்திப் பழித்துக் கொள்ளுதலையே ஒரு பெரும் இன்ப நுகர்ச்சியாகக் கருதுகின்றனர்' என **வொர்ட்ஸ் வொர்த்** என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் பாங்குறக் கூறுகின்றார் (3).

மாணிக்கவாசகர் இறைவன் பெருமை யுணர்ந்தவாற்றுல் தமது சிறுமை தெளிந் தவர்; தம் சிறுமை அறிந்து இறைவனின் பெருமை யுணர்ந்தவர். **"பணியுமாம் என்றும் பெருமை"** என்பதற்கு மாணிக் கவாசகரே சிறந்த எடுத்துக் காட்டாக இலங்குகின்ருர். தாழ்வெனும் தன்மை தோன்ற அவர், தம்மை எங்ஙனமெல் லாம் இழித்துரைத்துப் பழித்துக் கொள் கின்ருர் என்பதனை ஆராய்ந்தறிதலும், நாம் அவர்தம் பெருமையினை யுணர்தற்கு ஒரு நல்ல வாயிலாகும்.

1. பொல்லா வினையேன்
2. எஞ்ஞானம் இல்லாதேன்
3. வல்வினையேன்
4. நலந்தான் இலாத சிறியேன்
5. நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்
6. பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன்
7. அவமே பிறந்த அருவினையேன்
8. யாவரினும் கடையனுய நாயினேன்
9. அவாவெள்ளக் கள்வனேன்
10. இரண்டுமிலித் தனியனேன்
11. கல்வகை மனத்தேன்
12. எட்டினேடு இரண்டும் அறியேன்
13. யாதும் ஒன்றல்லாப் பொல்லா நாயான நீசனேன்
14. செய்வது அறியாச் சிறுநாயேன்
15. பொய்யர் பெறும் பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்
16. ஊர் நாயிற் கடையானேன்
17. நெஞ்சு உருகாதேன்
18. கல்லாம் மனத்தேன்
19. கசியாதேன்
20. பொல்லா நாயான புன்மையேன்
21. நாணம் இல்லா நாயினேன்
22. இழுப்பு நெஞ்ச வஞ்சனேன்
23. ஏண் நாண் இல்லா நாயினேன்
24. பழுதே பிறந்தேன்
25. வஞ்சகப் பெரும் புலையனேன்
26. யாரினும் கடையனுயினேன்
27. பிழையே பெருக்கிச் சுருக்கும் அன்பின் வெற்றடியேன்
28. தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேன்
29. கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேன்
30. வன்னெஞ்சக் கள்வன்
31. மனவலியன்
32. கள்வன் கடியன் கலதி
33. ஏழைத் தொழும்பனேன்

---

(2) " When I read the lives of the great saints I was always worried by their manifestations of *humility*, which seemed to me to be *excessive.* It seemed to me that people at such a height of *perfection* and practising such heroic virtues strove to debase themselves below everyone else......

But now I am convinced that sanctity means, above all, *humility* ...... As the saints advance in the double knowledge of God and their own souls, they got such a piercing vision of their unworthiness that they abase themselves and annihilate themselves by the most natural of instincts...... They see what man, as compared with the light of God, really is even when sanctified, and they are horrified.

—*Leo Tolstoy*: Talks with Tolstoy.

(3) " There is *luxury* in self-dispraise;
And inward self-disparagement affords
To *meditative* spleen a grateful *feast.*
—Wordsworth.

34. பொல்லாக் கல்வி ஞானமிலா அழுக்கு மனத் தடியேன்

35. கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேன்

36. ஆதமிலி நாயேன்

37. பயனிலியாய்க் கிடப்பேன்

38. பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்

39. மண்ணிலே பிறந்து மண் ஆவதற்கு ஒருப் படுகின்றேன்

40. மூர்க்கரோடு முயல்வேன்

தாழ்வெனும் தன்மை தோன்ற இத் தகைய பலப்பல சொற்றொடர்கள், திருவாசகத்துள் ஆங்காங்கு மிக்கு விரவி நிரம்பிக் காணப்படுகின்றன. தம்மைப் பழித்துரைத்துக் கொள்ளுதலில்தான், மாணிக்கவாசகர்க்கு எத்துணை ஆர்வம்! தம்முடைய புலமை நலனையும், சொல் லாட்சித் திறனையுமெல்லாம் தம்மைத் தாமே தாக்கிப் பழித்துரைத்துக் கொள் ளுதலில் அன்றோ, அவர் பெரிதும் விரும் பிப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்! அவர் தம்மைப் பழித்துக் கொள்ளுதற் காகப் புதிய புதிய சொற்களையும், வெவ்வேறு வகையான சொற்றொடர்கள் பலப்பல வற்றையும் வழங்கியருளியுள்ள திறம், மிக்க இலக்கிய நயமும் சிறந்த கவிதைத் திறனும் வாய்ந்து, நம்மை வியப்பிடை வீழ்த்தி நமக்குக் களிப்பை விளைவிக்கின்றது.

## பொய்யிருளும் மெய்யொளியும் :

திருவாசகம் பொய்ம்மையைக் களைந்து மெய்ம்மையை விழைந்து நிற்கும் ஒரு சிறந்த பக்தி ஞானப் பனுவலாகும். பொய்ம்மையை விரும்புபவரும், மெய்ம் மையை வெறுப்பவரும் இவ்வுலகில் எவரும் இலர். "பொய்யாமை பொய் யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" எனவும், "யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற" எனவும் **திருவள்ளுவர்** கூறுவர். "பொய் தீர் ஒழுக்க நெறி" என்று அவரே பிறி தோர் இடத்திற் கூறுதலால், பொய்ம்மை தீர்ந்ததே ஒழுக்கநெறியாதல் பெறப்படும்.

நாம் எல்லாம் நம் அறிவும் உளமும் ஒருவழி ஈர்ப்ப, ஐம்பொறியும் புலன் களும் பிறவும் பிறிதொரு வழியில் ஈர்ப்ப இடையே நின்று செயலற்று வருந்தித் திகைத்துப் பெரும்பாலும் பொய்வாழ்க் கையே வாழ்ந்து வருகின்றோம். நம் உள்ளம் நினைப்பது ஒன்றும், வாய் பேசுவது பிறிதொன்றும், உடல் செய் வது வேறொன்றுமாகவே பெரும்பாலும் இருக்க, நம் வாழ்க்கையினை எங்ஙனமோ ஒருவாறு கழித்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய பொய்வாழ்க்கையின் நீங்கி, மெய் வாழ்க்கையின் மேவி மிளிர்தல் வேண்டும் என்றே, திருவாசகம் அலறிக் கதறி ஆண்டவனை வேண்டுகின்றது.

1. பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி

2. பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி

3. பொய்யர் பெறும் பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்

4. போற்றி என்போலும் பொய்யர்தமை ஆட்கொள்ளும் வள்ளல்

5. பொய் கலந்தது அல்லதில்லை பொய்ம்மையேன் என் எம்பிரான்

6. விச்சுக்கேடு பொய்க்கு ஆகாது என்று இங்கு எனை வைத்தாய்

7. சிவமா நகர் குறுகப் போனர் அடியார்; பொய்யும் யானும் புறமே போந்தோமே

8. புறமே போந்தோம் பொய்யும் யானும்

9. யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்

10. பொய்யில் இங்கு எனைப் புகுதவிட்டு நீ போவதோ? சொலாய் பொருத்தமாவதே

11. பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை யுண்மையேன்

12. பொய்யவனேனைப் பொருள் என ஆண்டு ஒன்று பொத்திக் கொண்ட மெய்யவனே

13. பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே

14. மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்

15. மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே

என்பன முதலாகப் பலப்பல குறிப்புகள் திருவாசகத்துட் போதருதல் காணலாம். மாணிக்கவாசகர்க்குப் பொய்ம்மையின்பால் உள்ள வெறுப்பும், மெய்ம்மையின்பால் உள்ள விருப்பும் இவற்ருல் நன்கினிது புலனுகின்றன. தம் மாட்டுள்ள பொய்ம்மைகள் ஒழிந்து, தாம் மெய்ம்மை நிலையின் மேவி வீறுற்று விளங்குவதற்கு அருள் செய்தல் வேண்டும் என அடிகள் மிகவும் ஆராமையோடு, இறைவனைப் பெரிதும் வேண்டி நிற்றலைத் திருவாசகத்தின்கண் நாம் யாண்டும் காணலாம். எனவே பொய்யிருள் ஒழிந்து, மெய்யொளி அடைந்து வாழ விரும்பும் எவர்க்கும், திருவாசகம் ஒரு பெருந்துணையாகும் என்பதில் ஐயமில்லை.

**இலக்கிய நலம் :**

இனி, இவற்றினையெல்லாம் விடத் திருவாசகத்தின் சிறப்பியல்புகளுள் முதன்மை மிக்கதாகக் குறிப்பிடற்பாலது ஒன்றுண்டு. அதுதான் யாதுஎனில், இளமகளிர்கள் தம்முள் ஒன்றுகூடி விளையாடி மகிழும் அரிய நல்ல முறையில் அமைத்து,

திருவெம்பாவை

திருவம்மானை

திருப்பொற் சுண்ணம்

திருக்கோத்தும்பி

திருத்தெள்ளேணம்

திருச்சாழல்

திருப்பூவல்லி

திருவுந்தி

திருத்தோள்நோக்கம்

திருப்பொன்னூசல்

அன்னைப்பத்து

குயிற்பத்து

முதலிய திருப்பதிகங்கள் அருளிச் செய்யப் பெற்றிருத்தலேயாகும். சமணர்களும் பௌத்தர்களும் பெரும்பாலும் பெண்மையை இகழ்ந்து பழித்து வந்த காலநிலையில், இங்ஙனம் மாணிக்கவாசகர் பெண்மைக்கு முதன்மை கொடுத்துப் பல திருப்பதிகங்கள் பாடியருளியமை வியந்து பாராட்டுதற்குரியது.

சிறுமகாஅர்கட்கு விளையாட்டு முறையின் வைத்தே கல்வி பயிற்றுதல் வேண்டும் (Play-way method) எனக் கட்டுரைக்கும் நல்லறிஞர் பலரும், மணிவாசகர் இங்ஙனம் மகளிர் விளையாட்டின்கண் வைத்து அரிய பெரிய மெய்ப்பொருட் கருத்துக்களை நம்மனோர்க்கு மிக எளிய முறையிற் கூறிக் கற்பித்துச் சென்றிருக்கும் திறம் நினைத்து வியவாதிரார்.

மணிவாசகர் மிகச் சிறந்த பெரும் புலவராயினும், சங்க காலக் கடுந் தமிழ் நடையில் தம் கவிதைகளை அருளிச் செய்யாமல், இக்கால நாட்டு மக்கட் பாடல்கள் (Folk-songs) போல, எளிய இனிய சிறந்த நடையில், இளமகளிர் விளையாடல்களில் வைத்துப் பாடியருளியிருக்கும் திறம், பெரிதும் மகிழ்ந்து பாராட்டற் குரியதாகும்.

மேலும் இவைகள் வெறும் பதிகங்களாக இல்லாமல், வெவ்வேறு வகையான அமைப்பும் இலக்கணமும் உடைய அழகிய சிறு சிறு தனித்தனிப் பிரபந்தங்களின் நிலையில் அமைக்கப்பட்டிருத்தலும் எண்ணி யுணர்ந்து இன்புறுதற்குரியது. பிற்காலத்தில் தோன்றிய பலவகைப் பிரபந்தங்களுக்கு, இவைகளே அடிப்படையாக அமைந்து வழிவகுத்துக் கொடுத்துள்ளன. இவ்வாற்ருல் சமயத் துறையில் மட்டுமேயன்றி, இலக்கியம் மொழி கலை பண்பாடு முதலிய பிற துறைகளிலும் கூட மணிவாசகர் அருளிய திருவாசகம் ஒப்புயர்வற்ற பெருஞ் சிறப்புடையதாக, வீறுற்ருேளிர்ந்து விளங்குகின்றது.

**முடிவுரை :**

இத்தகைய பலபெருஞ் சிறப்பியல்புகளையுடைய திருவாசகத் தென்றமிழ் மாமறையினைத் தமிழர் அனைவரும்,

தக்கவாறு போற்றி ஓதி நலம்பெறும் கடப்பாடு உடையராவர்!

உள்ளம் உருக்கி உணர்வைச் சிவமாக்கும்
தெள்ளு தமிழ்த்திரு வாசகம்தான்—மெள்ளமிக
நம்மை மலங்கெடுத்து நல்லவெல்லாம் எய்துவித்துச்
செம்மையுறு விக்கும் தெளி.

—ஆசிரியர்.

**ஒரு குறிப்பு :**

பெண்மை இயல்பினை உள்ளபடி அறிதலும், பெண்மைப் பண்பு நலங்களைச் சிறப்புற விளக்குதலும் எளிய செயல் அன்று. ஆல்ஃபிரட் ஆர்பேஜ் (Alfred Harbage) என்னும் அறிஞர் தாம் எழுதிய "அவர்கள் விரும்பியது போல" (As they Liked It) என்னும் நூலிற் பின்வரும் புள்ளி விவரம் ஒன்று தந்துள்ளார். "ஷேக்ஸ்பியர் தம்முடைய 38 நாடக நூல்களில் 1217 பண்புப்படைப்புக்களை (Character-Creations) உருவாக்கியுள்ளார்; அவற்றில் 775 படைப்புக்களே பெயரிடப் பெற்றுள்ளன; அவற்றுள்ளும் 157 மட்டுமே பெண்மைப் படைப்புக்களாக உள்ளன" என்கிறார். இவ்வாற்றால் பெண்மை இயல்பினை விளக்குதல் எத்துணைக் கடினம் என்பது விளங்கும் (4). இம்முறையில் நோக்கினும், ஒரு வகையில் நம் திருவாசகப் பதிகங்கள் பல, பெண்மைப் பண்பு நலங்களைச் சிறப்புற எடுத்து விளக்கும் பெற்றியிலும், சிறந்து திகழ்தல் காணலாம். —ஆசிரியர்

(4) "The poets who have had an instinctive insight into woman, can be literally counted on the fingers of one's hand.... This proves how difficult it is for even a poet of the first rank to create and characterise women." *Sri Aurobindo*, On Kalidasa

## கோயில் நிகழ்ச்சிகள்

சேலம் சுகவனேசுவர சுவாமி கோயில், கந்தர் சஷ்டி விழா

சிரவணபுரம் கௌமார மடாலயம், கந்தர் சஷ்டி இலட்சார்ச்சனை

திருப்புகலூர் இராமநதிசுவரம் இராமநாதசுவாமி கோயில், கந்தர் சஷ்டி விழா

திருமயிலாடி சுந்தரேசுவர சுவாமி கோயில், ஷை

திருத்துறைப்பூண்டி பிறவிப்பணி மருந்திசுவரர் கோயில், மண்டலாபிஷேக விழா (24—10—65)

சென்னை கந்தகோட்டம் கந்தர் சஷ்டி விழா

இலஞ்சி குமாரசுவாமி கோயில் கந்தர் சஷ்டி விழா

சிவகிரி பாலசுப்பிரமணியர் கோயில் சண்முகர் திருக்கல்யாண விழா

தாராபுரம் அகத்திசுவரர் கோயில் கந்தர் சஷ்டி விழா

கோவில்பட்டி பூவணநாதசுவாமி ஐப்பசித் திருக்கல்யாண விழா

கொழும்பு ஜெயந்திநகர் சுப்பிரமணியர் கோயில் கூட்டுப்பிரார்த்தனை

மாயூரம் விளநகர் வரதராஜப் பெருமாள் கோயில் மகா சம்ப்ரோட்சண விழா (20—10—65)

வீரவநல்லூர் பூமிநாதர் மரகதாம்பாள் திருக்கல்யாண விழா

திருத்தணிகை சுப்பிரமணியசுவாமி கந்தர் சஷ்டி விழா, இலட்சார்ச்சனை

சுவாமிமலை சுவாமிநாதசுவாமி ஷை

திருவண்ணாமலை கார்த்திகைத் தீப விழா (25—11—65 to 11—12—65)

திருவிடைமருதூர் பன்னிரு திருமுறைப் பாராயண விழா (20-9-65—21-1-66)

திருச்செந்தூர் கந்தர் சஷ்டி விழா

எட்டிய வயல் பாலசுப்பிரமணியர் கந்தசஷ்டி இலட்சார்ச்சனை.

# திருப்புகழ் அமிழ்தம்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர—என ஓதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்

முப்பத்துமு வர்க்கத் தமரரும்—அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில்—இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய

பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்!
பட்சத்துடன் ரட்சித் தருளுவ—தொருநாளே?
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு—கழுதாட

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக—எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு

குத்திப்புதை புக்குப் பிடிஎன—முதுகூகை
கொட்புற்றெழ நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல—பெருமாளே!

**(பொழிப்புரை):** முத்தைப் போன்ற வரிசையாகிய அழகிய பற்களையுடைய தெய்வயானை அம்மையாருக்குத் தலைவனே! வேற்படையை ஏந்திய முருகனே! வீடுபேறு தருதற்கு ஒப்பற்ற விதையைப் போன்றவனே! குருபரனே! என்று துதிக்கின்ற மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்கு வேதத்திலே முதன்மையாகச் சொல்லப் பெற்றதாகிய பிரணவ மந்திரத்தை உபதேசித்து, பிரமன் திருமால் ஆகிய இருவரும், முப்பத்து மூன்று வகைத் தேவர்களும், உனது திருவடியைப் போற்றி விரும்ப, (அவுணர்களுடன் போர்செய்ய வல்ல பெருமானே!)

இராவணனுடைய பத்துத் தலைகளும் சிதறும்படி அம்புகளை ஏவியும், மந்தரம் என்னும் ஒரு மலையை மத்தாக அமைத்துக் கடலைக் கலக்கியும், ஒரு பட்டப் பகலை வட்டமாயுள்ள தனது சக்கரங் கொண்டு இரவாகும்படி செய்தும்,

பக்தன் ஆகிய அருச்சுனனுடைய தேரைப் பாரதப்போரின்கண் சாரதியாக அமர்ந்து செலுத்திய, பச்சை மேகம் போன்ற திருமால் மெச்சத் தகுந்த பரம் பொருளே! நீ என்மீது அன்புவைத்து என்னைக் காத்தருளும் ஒரு நல்ல நாளும் உண்டாகுமோ?

'தித்தித் தெய' என்னும் தாளத்துக்கு ஏற்ற வகையிற் சிலம்புகள் அணிந்த நடனப் பதத்தை வைத்துப் **பயிரவி** திக்குகளிற் சுழன்று நடிக்கவும், கழுகுடன் பேய்கள் ஆடவும்,

திக்குகளைக் காக்கும் அட்ட பயிரவர்கள் 'தொக்குத் தொகு' எனவரும் அழகிய மண்டலக் கூத்தை ஆடித் 'திரிகடக' என ஓதவும்,

கூட்டமாகப் பறைகள் கொட்டவும், போர்க்களத்தில் 'குக்குக்குகு' 'குத்திப் புதை' 'புக்குப்பிடி' என்று ஒலிசெய்து முதிய கூகைப் பறவைகள்

வட்டமிட்டு எழவும், நட்பை ஒழித்து, அசுரர்களை வெட்டிப் பலியிட்டுக் குலகிரியாகிய கிரவுஞ்ச மலையைக் குத்துப்படத் தாக்கிப் போர் செய்யவல்ல பெருமாளே!

**(விளக்கக் குறிப்புகள்)** "பொரவல பெருமாளே! நீ என்னைப் பட்சத்தொடும் ரட்சித்தருளும் ஒருநாளும் உண்டோ?" எனப் பொருள் முடிவு கொள்க. முருகப் பெருமான் அருணகிரிநாதரை ஆட்கொண்டு, தன்னைப் பாடிப் பரவுமாறு பணித்தருள, நின்னை எளியேன் எவ்வாறு பாடவல்லேன்? என்று கூறி அருணகிரிநாதர் தயங்கியபோது, இப்பாடலின் முதல்வரியாகிய "**முத்தைத்தரு பத்தித்திருநகை**", என்னும் அடியினை முருகப் பெருமான் எடுத்துக் கொடுத்தருளினன் என்பது வரலாறு. தரு–போன்ற, உவமஉருபுச் சொல். பத்தி–வரிசை. திருநகை–அழகிய பல். அத்திக்கு இறை–தெய்வயானையின் கணவர். அத்தி–யானை. சத்தி–வேல். சரவணன்–முருகன், சரவணப் பொய்கையில் தோன்றியவன். முத்தி–வீடுபேறு. வித்து–விதை. குருபரன்–ஆசிரியர்களிற் சிறந்தவன், சுருதி–வேதம், சுருதியின் முற்பட்டது–பிரணவ மந்திரம். கற்பித்து–உபதேசித்து. 'கற்பித் **திடுபொருள்**' என்றும் பாடம். 'பொருளே' என **விளியாகக்** கொள்க.

உருத்திரர் 11, சூரியர் 12, வசுக்கள் 8, தேவ மருத்துவர் 2 ஆகத் தேவர்கள் முப்பத்துமூன்று **வகையினர்** ஆவர். ஆதலின் '**முப்பத்துமூவர்க்கத்து அமரர்**' என்றார். '**நால்வேறு இயற்கைப் பதினொரு மூவர்**' எனத் திருமுருகாற்றுப் படையிலும் வருதல் காண்க. மூவர்க்கம்–மூன்றுவகை. 'முருகன் திருமால் **மருகன்**' ஆதலின் 'பச்சைப்புயல் **மெச்சத்தகு பொருள்**' என்றார். இராமன், கிருஷ்ணன் என்னும் திருவவதாரங்கள் இரண்டையும் செய்தருளியவர் திருமால் ஒருவரே யாதலின் அவ்விருவரின் செயல்களையும் சேர்த்து விரவிப் பாடினார்.

பத்துத்தலை தத்தக்கணை தொட்டது, இராமபிரான் செயல். பத்தற்கு இரதத்தைக் கடவியது, பார்த்தசாரதி யாகிய கண்ணபிரான் செயல். அபிமன்யுவைக் கொன்ற சயத்திரதனைச் சூரியன் மறையும் மாலை நேரத்திற்குள் கொன்று முடிப்பேன் என்று அருச்சுனன் செய்த சபதம் நிறைவேறும் பொருட்டுக் கண்ணபிரான், சூரியனைத் தன் சக்கரத்தால் மறைத்தருளினார் ஆதலின் '**பட்டப்பகல் வட்டத்திகிரியில் இரவாக**' என்றார். திகிரி–சக்கரம். பட்சம்–விருப்பம். ரட்சித்தல்–காத்தல். பரிபுரம்-சிலம்பு. நிர்த்தம்-நிருத்தம், நடனம். பயிரவி-கொற்றவை, துர்க்கை, போர்க்களத்தில் வெற்றிக்குரிய தெய்வம். '**திக்குக் கொட்க**' என்பது 'திக்கொட்க' என வந்தது. கொட்க–சுழல, கழுது–பேய், பரித்தல்–காத்தல்.

அசிதாங்கன் காபாலி சண்டன் உருரு குரோதன் சங்காரன் பீடணன் உன்மத்தன் என்னும் எண்மரும் **அட்டபயிரவர்** எனப்படுவர். அவர்களின் தொழில் எட்டுத்திசைகளையும் காவல் புரிவது ஆதலின் 'திக்குப்பரி அட்டப் பயிரவர்' என்றார். அஷ்டம்–எட்டு, பவுரி–மண்டலக்கூத்து; சுழன்று ஆடும் நடனம். குலகிரி–சிறந்த பெரியமலை; அஃது இங்குக் **கிரவுஞ்சம்** என்னும் மாயமலையினைக் 'குறித்தது. 'தித்தித்தெய' 'தொக்குத் தொகு' 'திரிகடக' 'குக்குக்குகு' 'குத்திப்புதை' புக்குப்பிடி' என்பன ஒலிக்குறிப்புச் சொற்கள். இவை சந்த அமைப்பின் அழகை விளக்கும். ★

# "தெய்வம் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின்"

## முன்னுரை

சிலப்பதிகாரம் என்னும் சிறந்த செந்தமிழ்க் காப்பியத்தினைப் பாடி முடித்தருளிய இளங்கோவடிகள், அதன் இறுதிப் பகுதியில் உலக மக்கள் அனைவருக்கும் தாம் உணர்த்த விரும்பி விடுக்கும் செய்தி (Message) யாக அமைந்த ஒன்றே, 'தெய்வம் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின்' என்பது. தெய்வம் ஒன்று உண்டு எனத் தெளிதலும், அங்ஙனம் தெளிந்து கண்டுணர்ந்த சான்றோர்களைச் சார்ந்து அவர்களின் வழி நின்று ஒழுகுதலும், மக்கள் வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாதனவாகும்.

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்

—இளங்கோ அடிகள்.

## சமயவுணர்வு

மனிதன் உணவினால் மட்டுமே வாழ்வதில்லை. பொதுவாக உயிர்களுக்கும், சிறப்பாக மனிதனுக்கும் உரிய எத்துணையோ பல வகையான இயல்பூக்கள் (Instincts) உண்டு. தவிர்த்து விலக்க முடியாத அத்தகைய இயல்பூக்களுள், சமயவுணர்ச்சி (Religious Instinct) என்பதும் ஒன்று. மனிதனைச் 'சமயவுணர்வுடைய விலங்கு' (2) என **அரிஸ்டாட்டில்** என்னும் கிரேக்க நாட்டு அறிஞர் குறிப்பிடுகின்றார். 'சமயம் வேண்டா' என்று கூறுதல் தானும், முடிவில் ஒருவகைச் சமயம் ஆகவே முடிந்துவிடுதலை நாம் காண்கின்றோம்.

## தெய்வம் தெளிதற்பயன்

மனிதவுள்ளம் எதனாலும் நிறைவு பெறுவதில்லை. செல்வத்திலோ வசதியிலோ புகழிலோ நுகர்ச்சிகளிலோ எத்துணை உயர்ச்சி எய்தினாலும், அவற்றினால் நிறைவு கொள்ளாமல், மேலும் மேலும் கிடைக்கவில்லையே என்று அவற்றிற்காகக் குறைபட்டுக் கொண்டு ஏக்கற்று வருந்துவதே மனித நிலையாகக் காணப்படுகின்றது. இதனையே திருவள்ளுவர் **"ஆரா இயற்கை அவா"** எனக் குறிப்பிடுகின்றார். "வாழ்க்கையில் இருவகையான சோக நிகழ்ச்சிகள் உண்டு. ஒன்று ஏதேனும் ஒரு பொருளை விரும்பி அடைய முடியாமற் போவது; மற்றொன்று விரும்பிய பொருளை அடைந்து விடுவது" (1) எனப் **பெர்னார்ட்ஷா** என்னும் அறிஞர் சொல்லுகின்றார். அம்முறையில், நாம் ஒரு பொருளைப் பெறாத நிலையில் அதனைப் பெரிதும் அவாவி அலைகின்றோம். அதனைப் பெற்றுவிட்டாலோ, அதன்கண் ஆர்வம் குறைந்து, வேறு ஏதேனும் பிறிதொரு பொருளைப் பெற விழைந்து, அதற்காக அலக்கண் உறுகின்றோம்.

---

(1) "There are two tragedies in life: one is not to get our heart's desire; the other is to get it". —George Bernard Shaw.

இந்நிலைமை ஒரு சங்கிலிபோலத் தொடர்ந்து நீண்டுகொண்டே செல்லுதலை, நாம் நம்முடைய உலகியல் வாழ்வில் நாடோறும் கண்டு வருகின்றோம். 'ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்'' என்றபடி, நம்முடைய அளப்பரும் துன்பங்கள் அனைத்திற்கும் இத்தகைய ஆசையே காரணமாகின்றது. சமய வாழ்வில் தலைப்பட்டு உண்மையில் இறையுணர்வும் அருளும் எய்தப் பெறும் நிலையில்தான், மனித மனம் அவா அடங்கி அமைதியின்பம் எய்துகின்றது. இறையருளுணர்வு நிலையில்தான், முன்பெல்லாம் 'வேண்டும் வேண்டும்' என்று அலைந்துகொண்டு அலமந்திருந்த மனம்,

உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்

கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்......

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ

வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்

வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்

வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

என **மணிவாசகர்** போன்ற ஞானப் பெருமக்கள் பாடியருளியுள்ள தன்மையினை எய்துதல் இயலும்! தெய்வம் தெளிதலால் விளையும் பயன்கள் பலவற்றுள் இஃதும் ஒன்று.

**வாழ்வியல் அனுபவங்கள் :**

வாழ்க்கையின் பலவேறு வகையான துன்பங்கள் தொல்லைகள், குற்றம் குறைகள், நிலையில்லாத் தன்மை, வியத்தகு நிகழ்ச்சிகள், எதிர்பாரா விளைவுகள், பற்பல மாறுதல்கள் ஆகியவற்றை யெல்லாம் கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணருந்தோறும், நமக்குத் தெய்வம் ஒன்று உண்டு என்னும் உணர்வும் தெளிவும் ஏற்படாமல் இருத்தல் இயலாது.

'வாழ்வாவது மாயம். இது மண்ணாவது திண்ணம்' என்று அருளிய சுந்தரர்க்குத் தோன்றிய அநுபவம், நம் எல்லோர்க்கும் ஏற்புடையதாகவே தோன்றுகின்றது. நீரிற் குமிழி இளமை; நிறைசெல்வம் நீரில்சுருட்டும்நெடுந்திரைகள்; நீரில் எழுத்தாகும் யாக்கை; நம் இளமையும் செல்வமும் யாக்கையும் நிலைபேறு உடையன அல்ல. நமக்கு உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது; நாம் செய்யும் வினையின் பயன்கள் நம்மை அடைந்தே கழியும். அவை சிறுகா-பெருகா-முறை பிறழ்ந்து வாரா. நம்முடைய அறிவும் ஆற்றலும் நுகர்ச்சியும் ஓர் எல்லைக்கு உட்பட்டவையே. நம்முடைய சிறுமைகளுக்கு அளவேயில்லை.

வாழ்க்கை என்பது ஒருவகை நாடகமே, வெறும் நிழலே. உலகம் ஆகிய மேடையில் தோன்றி, ஒருகால எல்லைவரை ஓடி ஆடி உழன்று, அதன் பின்னர்ப் பிறிதெதுவும் கேட்கப்படா தொழியும் ஓர் ஏழை நடிகனைப் போன்றவர்களே நாம்! இரைச்சலும் ஆரவாரமும் நிரம்புமாறு, ஒரு பொருட் குறிப்பும் இல்லாமல், அறிவிலி ஒருவனாற் சொல்லப்படும் சுவையற்ற ஒரு கதையினைப் போலவே, நம் வாழ்க்கையும் உள்ளது (2).

—தொடரும்

---

(2) "Life's but a walking shadow;
a poor player
That struts and frets his hour
upon the stage,
And then is heard no more;
it is a tale
Told by an idiot, full of sound and fury,
Signifying nothing."
—*Shakespeare*, Macbeth.

## அறநிலையங்கள் ஆற்றும் அரும் பணிகள்

[சமயம் என்பது சமுதாயத்தோடு மிகவும் தொடர்புடையது; ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டுமேயன்றிச் சமுதாயநல வளர்ச்சிக்கும் சமயம் பெரிதும் துணைபுரிகின்றது. ஆதலின் நமது சமய அறநிலையங்கள், சமுதாய நல வளர்ச்சி குறித்துப் பல நல்ல அறப்பணிகளைச் செய்து வருகின்றன! ஆயினும் நமது அறநிலையங்கள் ஆற்றிவரும் நல்ல பல அறப்பணிகள், நம்மிற்பலருக்கே தெரிவதில்லை. எனவே "அறநிலையங்கள் புரிந்துவரும் அரிய பெரிய பணிகளை, அனைவரும் அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. அதனால் அறநிலையப் பணிகள் மேலும் ஆக்கம் பெறுவதுடன், பொதுமக்களும் பலவகைகளிற் பயன் அடைதல் இயலும்" என நம் அன்பிற்குரிய ஆணையர் அவர்கள் கருத்துத் தெரிவித்தபடி, இவ்விதழில் அறநிலையங்கள் ஆற்றும் அரும்பணிகள் பற்றிய விவரம் தரப்பெறுகின்றது.

—ஆசிரியர்]

**கல்லூரிகள் :**

1. சம்ஸ்கிருதக் கல்லூரி, ஸ்ரீ அகோபில மடம்—மதுராந்தகம்.
2. பல்கலைக் கல்லூரி—தருமபுரம் ஆதீனம், மாயூரம்.
3. சிவஞானபாலைய சுவாமிகள், செந்தமிழ்க் கல்லூரி, பொம்மபுர ஆதீனம், மயிலம்.
4. செந்தமிழ்க் கல்லூரி, காசிமடம், திருப்பனந்தாள்.

**பசுமடங்கள் :**

1. ஸ்ரீ அக்கினீசுவர சுவாமி தேவஸ்தானம், திருப்புகலூர், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம்.
2. ஸ்ரீ திருமலைக் குமாரசுவாமி தேவஸ்தானம், பண்பொழி, (பைம்பொழில்), திருநெல்வேலி மாவட்டம்.
3. ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி, மதுரை மாவட்டம்.
4. ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.

**இலவச மருந்துவ நிலையங்கள் :**

1. ஸ்ரீ அக்கினீசுவர சுவாமி தேவஸ்தானம், திருப்புகலூர், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம்.
2. ஸ்ரீ திருமலைக்குமார சுவாமி தேவஸ்தானம், பண்பொழி, (பைம்பொழில்).
3. பிள்ளையன் கட்டளைகள், திருநெல்வேலி.
4. சித்த வைத்தியசாலை, குற்றாலம்.
5. ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி, மதுரை மாவட்டம்.
6. சித்த வைத்தியசாலை, திருநெல்வேலி.
7. வைத்தீசுவரன் கோயில், வேளூர் தேவஸ்தானம், இலவச சித்த வைத்தியசாலை.

(தொடரும்)

# விடை தெரியுமா?

[அன்பியற் பெருந்தகை ஆகிய நமது அறநிலைய ஆணையாளர் அவர்கள் விரும்பித் தெரிவித்தபடி, இப்புதிய பகுதி தொடங்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் வரும் வினாக்கள் கற்றுணர்ந்து வல்ல அறிஞர்களுக்கு மிகவும் எளியனவும், முன்பே நன்கினிது தெரிந்தனவுமேயாகப் பெரும்பாலும் அமைந்திருத்தல் இயல்பேயாகும். எனினும் சாதாரணப் பொதுமக்கள் பலரும் தெரிந்துகொண்டு மகிழ்வதும் பயன் பெறுதலும் ஆகிய நோக்கம் கொண்டே இவைகள் இங்குத் தரப் பெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து படித்து வருவதனால் "சிறு துளி பெருவெள்ளம்" என்னும் நிலையிலும், "எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என்ற முறையிலும், சமயத் துறையிற் பொதுவாகப் பலதுறைச் செய்திகளைப் பற்றிப் படிமுறையே தெரிந்து கொண்டு, மக்கள் அனைவரும் பயன் பெற்று மகிழ்தல் திண்ணம்! வாசகர்கள் பலருக்கும் இப்பகுதி நன்கினிது பயன் படுமாறு அமைவதற்கு, இறையருள் துணை புரிவதாக! —ஆசிரியர்]

1. 'பிள்ளையார் சுழி' என்பதன் தத்துவம் யாது?

2. 'தேவாரம்' என்னும் சொற்குப் பொருள் என்ன?

3. 'திருமுறை' என்னும் சொல்லின் பொருள் யாது? பன்னிரு திருமுறைகளின் இயல்பினையும் சுருக்கமாகக் குறிப்பிடுக.

4. சித்திரைத் திருவாதிரையில் திருவவதாரம் செய்த சமய ஆசிரியர்கள் இருவரைக் குறிப்பிடுக.

5. அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவர் யார்?

6. இராசகண்ட கோபாலர் என்பவர் யார்?

7. 'நாலிரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான் வாழியே
நாலெட்டின் உட்பொருளை நடத்தினான் வாழியே"

   எனவரும் வாழித் திருநாமம் யாருக்கு உரியது? இவ்வரிகளின் பொருள் யாது?

8. "வீராட்டகாசம்" என்னும் கோயில் எங்குள்ளது? அதற்கு அப்பெயர் அமையக் காரணம் என்ன?

9. "பஞ்ச சம்ஸ்காரங்கள்" என்பன யாவை?

10. திருநின்றியூர், திருநின்றவூர்—இரண்டும் ஒன்று? வெவ்வேறு?

—விடை 81-ஆம் பக்கம் பார்க்க.

# மதிப்புரைகள்

**நவசந்தி நிருத்தம் :**

கோயில்களில் பிரம்மோற்சவ காலங்களில் கொடியேற்று விழாவின் போது, விழா இடையூறு இன்றி இனிது நிறைவு பெறுவதற்காக, ஆண்டவனையும் அஷ்டதிக்குப் பாலர்களையும் நோக்கி வேண்டிக் கொள்ளும் முறையில், விசேஷ தாளங்களில் பல்வேறு சொற்கட்டுக்களையும், ஒலி நுட்பத் துணுக்குகளையும் கலந்து இயற்றப் பெறும் பாடல்களான ''கவுத்துவம்'' என்பவற்றைக் கொண்டு, ஆடும் அழகிய நடனவகை **நவசந்தி நிருத்தம்** எனப்படும். நம் தமிழ் நாட்டுக் கோயில்களில் ஒரு காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்று, இந் நடனம் விளங்கி வந்தது. ஆனால் காலப் போக்கில் ஏறத்தாழ 200 ஆண்டுகளாக இஃது எவ்வாறோ மறைந்து போயிற்று.

இங்ஙனம் மறைந்து கிடந்த நவ சந்தி நிருத்தமும், அதற்குரிய பல சாகித்தியங்களான கவுத்துவங்கள் என்பனவும் அறவே அழிந்து விடாமல், அவற்றின் இயல்புகளை விளக்கிக் கிதம் பிரபந்தம் சூளாதி டாயம் ஜதி சிம்மநந்தனம் என்பவைகளைச் சுரதாளக் குறிப்புக்களுடன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீதத் துறைப் பேராசிரியர் என விளங்கியிருந்து மறைந்த, தஞ்சைத் திரு. **க. பொன்னையா பிள்ளை** அவர்களின் புதல்வர்கள் ஆகிய திரு. கே. பி. கிட்டப்பா, திரு. கே. பி. சிவானந்தம் சகோதரர்கள் இந்நூலில், சிறப்புற இயற்றியளித்துள்ளனர்.

இச்சிறந் தநூலினை, பத்தாண்டு காலமாகத் தாம் தொடங்கி நடத்திவரும் ''நாட்டியாலயா'' வின் முதல் வெளியீடாக, நாட்டிய கலா சூடாமணி-குமாரி **வைஜயந்திமாலா** அவர்கள், கலையுலகுக்கு அளித்து உதவும் கலைப்பெருந் தொண்டு மிகவும் போற்றி மகிழ்தற்குரியது. இசைத்துறையிலும் நடனத்துறையிலும் ஈடுபாடு உடையவர்களுக்கு, இந்நூல் மிகவும் பயன்படும். இதன் **விலை :** ரூபா 3-50. **கிடைக்குமிடம் :** பொன்னையா கலையகம், 7, பெரியபள்ளித்தெரு, சென்னை-28.

**முதற்குறளும் நூற்பாவும் ;**

முதுபெருஞ் சான்றோர் தமிழ்ப் பெரும் புலவர் சுகவனம் சிவப்பிரகாசனார், திருக்குறளைத் தழுவி அதனை மேலும் சுருக்கி, ஆத்திசூடி கொன்றைவேந்தன் போன்ற நீதிநூல்களின் அமைப்பில், ''குட்டிக் குறள்'' என்னும் பெயரில், இற்றைக்கு ஏறத்தாழ 45 ஆண்டுகட்டு முன்பு இயற்றியருளினார்கள். இதனைத் **திரு. வி. க., இராஜாஜி,** போன்ற பெருமக்கள் பலர் பாராட்டியுள்ளனர். இந்நூலின் அறத்துப்பால் 38 அதிகாரங்களுக்கும் திரு. **கி. வா. ஜ.** அவர்கள் உரை எழுதியிருக்கின்றார்கள்.

இத்தகைய இந்நூலின் முதல் அதிகாரம் முதல்வரி 'உலகுக்கெல்லாம் ஒரு பொருள் முதலே' என்பது. இவ்வரிக்குத் தம்முடைய இளமைக் காலத்தில் (1925), சங்கநூற் பெரும்புலவரான மாம்பாக்கம் குருகுலம் அருட்டிரு **அழகரடிகளார்** வரைந்த விருத்தியுரையே இந்நூல்! ஒரு வரியின் ஆழ்ந்த நுண்பொருள் நலங்கள் ஏறத்தாழ 60 பக்கங்களில் விரித்துரைத்து விளக்கப் பெற்றுள்ளன. தமிழ் ஆர்வலரும், இலண்டன் பல்கலைக் கழகத்துப் பேராசிரியரும் ஆகிய திரு. M. S. H. Thompson, B.A., F.C.P., அவர்களும் இந்நூலுக்கு ஓர் அணிந்துரை வழங்கியுள்ளார். இலக்கிய ஆர்வம் மிக்கவர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படும்! **விலை ;** ரூபா 1-25. **கிடைக்குமிடம் :** ஜகதா அண்ட் சன் : 376 திரு. வி. க. நகர், சென்னை-11.

**அவிரோத உந்தியார் :**

தமிழிலுள்ள சிறந்த சமய நூல்களின் வரிசையில் கோவை—பேரூர்ச் **சாந்தலிங்க சுவாமிகள்** இயற்றியருளிய நூல்கள் சிறப்பிடம் பெறுவன ஆகும். அவைகள் முறையே கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நான்கும் ஆகும். இந் நான்கு நூல்களுக்கும், சென்னைக்கு அருகேயுள்ள திருப்போரூர்ச்—சிதம்பர சுவாமிகள் மிகவும் சிறந்த முறையில் அரிய நுண்பொருள் உரை வகுத்தருளி யுள்ளார்கள். தமிழிலுள்ள சிறந்த சமய நூல் உரைகளின் வரிசையில், இவை முன்னணியில் முதன்மை பெற்று விளங்கு வன வாகும். உரையின்கண் ஏராள மான பற்பல நூற்களினின்று பலப்பல சிறந்த பாடல்கள் மேற்கோளாகக் காட்டப் பெற்றிருக்கின்றன. ஆதலின் இவற்றுள் ஒரு நூலைப் படித்தாலே எத் துணையோ பல நூல்களைப் படித்துப் பெறும் பயனையும், புலமையையும் பெற லாம் என்பது உறுதி.

சென்ற நூற்றாண்டில் இந்நான்கு நூல் களையும் ஒரு சேரத் திரட்டி, யாழ்ப் பாணம் ஸ்ரீலஸ்ரீ **ஆறுமுக நாவலர்** அவர் கள் அரிதின் ஆராய்ந்து அழகுறப் பதிப்பித்தருளினார்கள். எத்துணையோ பல நூல்கள் இருக்கவும், அவர்கள் இவற் றைப் பதிப்பிட முனைந்து முயன்று தேர்ந்தெடுத்துக் கொண்ட செயலே, இந் நூல்களின் ஒப்புயர்வற்ற சிறப்புக்குச் சான்று பகரும். சமயவுணர்வும் தெளி வும் பெற விழைவோர் அனைவரும் இன்றி யமையாது படித்து முடித்தற்குரிய நூல் கள் இவை. தமிழிலக்கியச் சுவை நுகர வும், சமயக் கருத்துக்களை நுண்ணிதின் அறிந்துகொள்ளவும், இவைகளை யாவரும் படித்தல் நலம்.

இத்துணைச் சிறந்த இந்நூல்களை, பேரூர்ச் சாந்தலிங்க அடிகளார் திருமடத் தின் சார்பில், சுவாமிகளின் குருபூசை விழா நினைவு மலர்களாக, அருட்டிரு. **இராமசாமி அடிகளார்** அவர்கள் அழ குறப் பதிப்பிட்டு வெளியிட்டிருக்கின்றார் கள். திருத்தமான சிறந்த அழகிய பதிப்பு. **விலை :** குறிப்பிடப்பெறவில்லை. **கிடைக்குமிடம் :** சாந்தலிங்க அடிகளார் திருமடம், பேரூர், கோவை 10.

—ஆசிரியர்,



திருமலை ஸ்ரீ அம்ருதவல்லித் தாயார்

# பாரதப் பண்போவியங்கள்

முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை.

## வேத வியாசர் (4-5)

"நீவிரே அல்லிர் முன்னர் நிலமுழு தாண்டநேமி,
நாவிரி கீர்த்தி யாளன் நளன் எனும் நாம வேந்தன்,
காவிரியென்ன நீங்காக்கருணையன் சூதில்தோற்றுத்,
தீவிரி கானம்சென்ற காதை நும்செவிப்படாதோ?"

இது வில்லியார் வியாசர் மொழியாக இசைக்கும் பாடல். பாண்டவர்களே!! நீங்கள் அரசர்கள். அரசருக்கரசன் **நளன்**. அந்நளன் என்னும் பெருஞ் சிறப்புடைய பெருந்தகை புட்கரனிடத்தில் சூதாட்டத்தால் தோற்றான். அவன் காடுபுக நேர்ந்தது. நீங்கள் காட்டில் நிற்கும் நிலையும், நளன் குடும்பம் நின்ற நிலையும் மிக வேற்றுமையுடையது. நீங்கள் ஐவரும் பல அந்தண விருந்தினருடன் பாஞ்சாலியுடன் நாட்டிலாளும் அரசைக் காட்டிலிருந்து ஆளுவது போல மிகப் பெருமிதத்தோடும் பொழுது போக்கிக் கொண்டு தங்கியுள்ளீர். நளச் சக்ரவர்த்தியோ தனது மக்களொருமூலை, மனைவியொரு மூலை, அரவத்தால் கடியுண்டு உருவம் மாறிய தானொரு மூலையாகச் சங்கடமுற்று நிற்க நேர்ந்தது. நளன் பட்டதுன்பத்தை உன்னும் பொழுது உங்கள் துன்பம் இன்பமாக மாறிவிடும். அதைவிட்டு வாழ்க்கைச் சிறப்பில் வைகும் மற்றுள அரசர்களை இந்த நேரத்தில் நினைத்தால் நாடோறும் அழுது அரற்றி அழுங்கிக் கிடக்க வேண்டியதுதான். அது அறிவுடையார் கைக்கொள்ளும் முறையும் அல்ல. என்று தேற்றினர் வியாசர்.

வியாசர் மற்றுமோர் உறுதிப் பாட்டையும் உரைத்தருளினர். பாண்டவர்களே!! வஞ்சகர் நெஞ்சகத்தில் நெறி காண்கின்ற உங்கள் பகைவனான துரியோதனனை வெல்லுவது எளிதென நீங்கள் எண்ணிவிடக் கூடாது. அவன் படை மிக வன்மையுடையது. வஞ்சக வழியால் வந்து வருத்துவது. அதனை வெல்ல உங்களுக்குத் தெய்வப்படையின் உதவி வேண்டும், அப்படி பெறற்குரிய உயர்ந்த பெரும்படை சிவபெருமானுடைய **பாசுபதம்** என்னும் சிறந்த படையே யாகும். அதனைப் பெறுவதற்குக் கயிலைமலைச்சாரலையடைந்து கடுமையான தவமியற்ற வேண்டும், அதற்குரியான் உங்களில் அருச்சுனனே யாவான், அவனையனுப்பி அருந்தவத்தால் அந்த நன்மையைப் பெற வேண்டும் எனக் கூறினர். இக் கருத்துக்கள் வரும் பாடல்,

'தோத்திர மான தெய்வச் சுருதிகள் யாவும் நான்காய்க்
கோத்தவன் பின்னுஞ் சொல்வான்; குன்றவில் லவன்பா வின்று
பார்த்தனே சென்று பாசு பதக்கணை வாங்கின் அல்லால்
ஆர்த்தபைங் கழலாய் எய்தாது அவன்படை முடித்தல் என்றான்'

இது பாண்டவர்கள் ஐவருங்கேட்க மொழிந்ததாயினும், தருமனான தலைவனை முதன்மைப் படுத்தி யுரைத்ததாகும். இதனைக் கேட்டு உள்ளம் உருகினன் அவன், ஒருவரை யொருவர் நினைக்கும் பொழுது நினைத்தவர் உள்ளம் எந்த நிலையில் நிற்கிறதோ அதே நிலையை அடைந்து விடுகின்றது, அவரால் நினைக்கப் பட்டவர் உள்ளமும். வியாசர் ஒரு பாம்பின் வாயில் அகப்பட்டு அலறும் தேரையின் நிலையில் நிற்கும் பாண்டவர்களைப் பற்றி உன்னியுன்னி அவர்களை மீட்க வேறுவழியொன்றுங்காணது தேவதேவனைக்காணச் செய்வதே தேற்றத்திற்கு வழியென முடிவுகண்டு, தாமாக ஐவரிடத்தையணுகிக் கூறும் அறிவுரையிது. ஆதலால், இது கேட்டவுடன் தருமனுக்கும் உள்ளத்தில் பெரும் உருக்கம் தோன்றியதாம். அவன் பரிவுடன் முனிவனைப் பணிந்து அவனது அருளுரைகளைச் சிரமேற்கொண்டனனும். இங்குவரும் மாற்றம் என்ற ஒரு சொல் மிகுந்த பொருளாழம் உள்ளது. **சொல்**

என்றால் சொல்லப்படுவது. **கிளவி**- உள்ளிருந்து கிளம்புகிறது, ஆதலால் கிளத்தப்பட்டு அது கிளவியென்றாகிறது. **மொழி** மொழியப்படுவது. **மாற்றம்** மாறறப்படுவது. எதை எங்கு மாற்றுவது! என்பன சிந்தனைக்குரியன. ஒரு செயலைக் குறித்து ஒருவருள்ளத்தில் உருக்கொண்ட சில உயர்ந்த முடிவுகளை, மற்றொருவர் உள்ளத்தில் அசையாமல் கொண்டு போய் வைக்கும் ஆற்றலுள்ள கருத்துத் தாங்கியாக அமையும் சொல்லை, **மாற்றம்** என்றார்கள் பெரியோர்கள். அருச்சுனனைக்கொண்டு அருந்தவமியற்றிப் பாசுபதம் பெறச்செய்து பாண்டவர்களைக் காக்க வேண்டும் என்ற உயர்ந்த உறுதியுள்ள கருத்துக்கள் வியாசர் உள்ளத்தில் உருப்பெற்று உறுதியும் பெற்றிருந்தனவாம். அவற்றை அவற்றினுக்கு உரியவர்களாகிய பாண்டவர்கள் உள்ளத்திற்கு மாற்றியளிக்கக் கருதினராம் வியாசர். இதற்கு உதவும் சொற்கள் சொல்லாகாது மொழியாகாது கிளவியாகாது மிகச் சிறப்புடைய மாற்றம் ஆயிற்றாம்.

"பரிவுடன் முனிவன் மாற்றம் பணிந்து தம்
சிரமேற் கொண்டு-
வரிசிலைக் குலக மெண்ணும் மகபதிமகனை நோக்கிக்-
கிரிசனை யுன்னி வெள்ளிக்கிரிபுறத் தெய்தி யார்க்கும்
அரிய நற்றவம் செய்தேனும் அவன் அருள் பெறுதி
ஐயா"

என அருச்சுனனுக்கு விடை கொடுத்து அனுப்ப ஒருப்பட்டனனும் தருமன்.

## வேதவியாசர் (5)

மிகப்பெரியவனான தருமபுத்திரன் தனது இரண்டாவது தம்பியாகிய அருச்சுனனை **ஐயா** என விளித்தனன். கம்பர் தசரதனை வசிட்ட முனிவர் ஒருநாள் "**அண்ணல்**" என அழைத்ததாக இசைக்கின்றார். குலகுருவான வசிட்டர் தமது அடியிணைகளைப் போற்றியரசாளும் ஒரு அரசனை அண்ணல் என அழைப்பதும், தருமன் தனது இளைய தம்பியை ஐயாவென அழைப்பதும், ஒருமைப்பாடமைந்த கருத்துக்களல்லவா? வசிட்டமா முனிவர் அப்படியழைக்க நேர்ந்த ஏது வென்னவென்பதனைப் பார்ப்போம்.

தசரதன் ஒருநாள் தனது அமைச்சியலாயத்தாரை ஒருங்குற அழைத்தனன். அக்கூட்டத்திற்கு எழுந்தருளிய வசிட்ட முனிவர் வேந்தனை அழைத்ததேன் என வினவினார். அரசன் குருபரா! இறத்தல் என்ற மிக உறுதியான ஒரு நிலையை உலக மக்கள் மறந்து விடுகிறார்கள். அம் மறதியின் காரணமாக நாம் என்றும் இருப்போமென எண்ணும் எண்ணங் கொண்டு எல்லாத் தீய செயல்களுக்கும் உடன்பட்டு விடுகின்றார்கள். அத் தீவினைச் செயல்களால் மறுபடியும் பிறப்பென்னும் பெருஞ் சுழலில்பட நேரிடுகின்றது. இப்பிறப்பும் இறப்புமாகிய பேரலைக்கிடமான கடலிலிருந்து கரையேற வழியேயின்றி வருந்துகின்றார்கள். இக்கவலைக் கடலிலிருந்து காக்கவல்ல அருந்துணை செய்வது துறவைத் தவிர வேறில்லை. ஆதலால் துறவென்னுந் தெப்பத்தைப் பற்ற யான் துணிகின்றேன். எனது சுமையாக நிற்கும் அரசை இராமனிடத்தில் ஒப்புவித்து எண்ணியதை மேற்கொள்ள வழிவிட வேண்டுமெனக் கேட்கவே இப்பேரறிஞரவையைக் கூட்டினேன் என்றனன் அரசருக்கரசன்.

"இறப்பெனும் மெய்ம்மையை இம்மை
யாவருக்கும்
மறப்பெனும் அதனின்மேல் கேடு
மற்றுண்டோ?
துறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடின்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைத்த
லாகுமோ?

"ஆதலால் இராமனுக் கரசை நல்கியிப்
பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்
கியாதுநுங் கருத்தென வினைய கூறினான்.

இப்படிக்கூறிய மன்னவனை மாமுனிவர் நோக்கினார். உனது கருத்துப் பொருத்தமுடையதே அப்படியே செய்யலாமென அறைதற்கு ஒருப்படுகின்றார். அச்சமயந்

தான் அரசனை விளிக்குந் தவமுனிவர் "அண்ணலே" என அழைக்கின்றார்.

"புண்ணியந்தொடர் வேள்விக ளனைத்தை
யும் புரிந்த
அண்ணலே! யினிஅருந்தவ மியற்றவும்
அடுக்கும்
வண்ண மேகலை நிலமகள் மற்றுனைப் பிரிந்து
கண்ணி முந்திலள் எனச்செயும் நீதந்த
கழலோன்"

எனச் சிறப்புறக் கூறினராம் வசிட்டர். இங்கு மன்னவன் உள்ளம் துறவு நிலையை மேற்கொண்டுவிட்டது. தசரதன் புற வேடத்தால் அரசனாகவும் அகவொளி யால் துறவியாகவும் விளங்குகின்றான். தசரதன் துறவு "துப்புர வில்லாதார் துவரத்துறவாமை உப்பிற்குங் காடிக் குங் கூற்று" என்றாரே வள்ளுவர். அப்படி பரிகசித்தற்கேதுவான துறவல்ல. உண்ண உணவும் உடுக்க உடையும் இல் லாத ஒருவன் துறக்கும் துறவிற்கும் உல கெலாம் பணிகேட்கும் அரசர்க்கரசன் தன் வளங்களை யெல்லாம் ஒரு தூசாக மதித்துத் துறக்குந் துறவிற்கும் எவ் வளவு வேற்றுமை? தசரதன் துறவல் லவா துறவு? எனக் கருதினர் முனிவர். அவரது உள்ளம் அவனது உயர்ந்த உளப்பாங்கினைப் பெருமதிப்போடு நோக் கிற்று, வழக்கப்படி அரசே யென்று அழைக்காமல் அண்ணலே! என்று அழைத்தலாயிற்று அவரது திருவாக்கு.

வியாச முனிவரால் உங்களில் பரமனைக் கண்டு தவம்புரிந்து பாசுபதம் பெறற்குரி யவன் அருச்சுனன் என்று கூறப்பெற்ற பொழுது, தருமபுத்திரன் உள்ளம் நனி மிக உருகிற்று. வயது முதிர்ச்சியால் ஒரு அளவு உலகப் பொருள்களில் வெறுப் புற்று வரும் என்னைத் தவத்திற்குரியவ னாக்காது, கடுமையான எத்தொழிலுக் கும் அஞ்சாத உரமுடைய வீமனைத் தவஞ் செய்கென்று விதிக்காது, அருச்சுனன் அருந்தவமியற்ற அணுகவெனக் கூறிய அருந்தவன் அருளுரைக்கு, எவ்வளவு உரி மையுடையவனானன் எனது தம்பியென மகிழ்ந்தனன் தருமன். ஒருபெருமாதவ ரால் மாதவத்திற்குரியவன் அருச்சுனன் என்ற பிறகு அப்பெருந்தகையைத் தம்பி யென்றே அருச்சுனனென்றோ அழைக்க எனக்கென்ன மேன்மையுளது எனக் கருதினான். இவ்வெண்ணங்கள் உள்ளத்தை உருக்கத் தருமபுத்திரன் திருவாக்கு தனது தம்பிக்குந் தம்பியாகிய அருச்சுனனை ஐயா! வென அழைக்க ஒருப்பட்டது. பத்தாயிரத்து நானூற்றியைம்பத்தொன் பது பாக்களையுடைய கம்ப ராமாயணத் தில் ஒரு மாதவன் ஒரு அரசப் பெரு மகனை அண்ணலே! எனவழைக்க வரும் செய்யுள் இது ஒன்றாகவும், நாலாயிரத்து முந்நூற்று ஐம்பத்தொரு செய்யுட்களை யுடைய வில்லி பாரதத்தில் மூத்தவன் இளவலை ஐயா! என அழைக்கவரும் அருமைப்பாடல் ஒன்றுமாக நிற்குமானால் துறவுள்ளங் கொள்வாருக்கு இக்கவி வேந்தர்கள் மறவாது செய்யும் மரியாதை கள் இத்தகையன வென்று எண்ணி யெண்ணி யின்புற வேண்டாமா? அவ் விருபாக்களையும் திரும்பப் பார்ப்போம்.

"புண்ணியந் தொடர்கேள்விகளனைத்தை
யும் புரிந்த அண்ணலே!" கம்பரில்வசிட்டர்.

"பரிவுடன் முனிவன் மாற்றம் பணிந்துதன்
சிரமேற்கொண்டு
வரிசிலைக் குலகமெண்ணும் மகபதி மகனை
நோக்கிக்
கிரிசனையுன்னி வெள்ளிக் கிரிப்புறத்
தெய்தியார்க்கும்
அரியநற் றவஞ்செய்தேனும் அவனருள்
பெறுதி ஐயா!" வில்லியில் தருமன்.

தவம் புரிந்தேனும் அப்பரமனருளைப் பெற்று வருவாயாக ஐயா! என வழி விட்டனன் தருமன்.

"எனவிடைகொடுப்ப மண்ணில் இணையிலா
வியாதன் பாதம்
மனனுறவணங்கி யாங்கோர் மந்திரம்
முறையிற்பெற்ற
கனிம்குதிதியும்நாளும் நல்லதோர்
முகூர்த்தந்தன்னில்
தனிவதி யியக்கர்காட்டத் தனஞ்சயன்
சேறலுற்றான்.

தனிவதிபென்பது-சனபதம் எனப்பாட பேதமுடையது. சனபதம் - ஜனங்கள் நடக்கும் கொடிவழி. தனிவதி - மக்கள் நடக்கும் ஓரடிப்பாதையோடு மலையூற்றுக்களால் சேருடும் வழிகள். மேலே கடுங்கனலூடு நிற்கவரும் தனஞ்சயன், நெருங்கிமிடைந்த கதிரொளியும் நுழையரும் காட்டில் பள்ளமும் மேடுமான அருவழிகளில் நடந்து செல்லத் தலைப்படுகின்றான். "துன்பஞ் சுடச்சுட" நோற்குந்திறம் இதுபோலும். "வாடாத தவமும், வாய்மையும்" உள்ள "முனிராஜனைவும்" மண்ணில் இணையிலா "வியாசனெனவுஞ் சிறந்து விளங்கும் பெருந்தகைமைப் பெருமான் அருச்சுனன் தவத்திற்குப் புறப்பட்டபின் தருமனுக்குச் சில அறிவுரைகளைக்கூறி வாழ்த்துரைத்துத் தானும் புறப்படலாயினன்.

மாறுபட்ட மனமுள்ளவர்கள் பலப்பல சூழ்ச்சிகளைச் செய்வார்கள், அவர்கள் உடனே அழித்தொழிக்கவல்ல விடமொத்த கொடுஞ் செயல்களைச் செய்வார்கள், அவர்கள் கொடுஞ் சொல்களில் வல்லதொரு கூட்டத்தையுஞ் சேர்த்துக் கொண்டு தீமை புரிய முன் வருவார்கள். யார் எப்படி என்னென்ன செய்தாலும் உங்களையொத்த அரசர்கள் ஒரு சிறிதும் மனநிலை குலைய மாட்டார்கள்; ஆதலின் நீங்களும் அஞ்சன்மின் என உறுதியுரைத்து வேதமுனிவர் வெளிப்பட்டனராம்.

"வெஞ்சல மனத்த ராளேர் விரகினால்
கூட்டங் கூட்டி
நஞ்சல துவமையில்லா நவைபுரிந்
தனர்களேனும்
சஞ்சலம் உம்மைப்போலுந் தரணிபர்
எய்தல் செய்யார்
அஞ்சலிர் என்று கூறி ஆரண முனியும்
போனான்.

"ஆடுகோடாகி அதரிடை நின்றதூஉம்–காழ்கொண்ட கண்ணே களிறணைக்கும் கந்தாகும். வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன்றான் – தாழ்வின்றித் தன்னைச் செயின்" என்ற நாலடியார் நவிற்சியை இங்கு நாம் எண்ணவேண்டும். ஒரு பொட்டல் நிலத்தில் வேலியின்றித் துணையொன்று மின்றிக் காற்றுத்தாக்கும் பக்கமெல்லாம் அலைமோதிக் கொண்டு கிடக்கும் ஒரு சிறு செடி தனது வேரை எட்டின மட்டுமனுப்பி வெயில் காலத்தில் அடிநீர் தேடியுண்டு மழைக் காலத்தில் பக்கங்களில் உள்ள வேர்களைப்பருக்கச் செய்து பலந்தேடிக் கொண்டு வெயிற் பகைக்குங் காற்றின்பகைச் செயலுக்கும் உலைந்து போகாமல் ஒருவாறுல் உரங் கொண்டு ஆடியமர்ந்து வளர்ந்து பின்னொரு காலத்தில் யானையைக் கட்டுங்கந் தாகவும் வலிவடைந்து விடுகின்றது. இடுக்கணுக்கு உளையாது பொறுத்து வளர்ந்து புதுமை பெற நிற்பது ஓரறிவுடைய மரங்களின் செயலென்றால் ஆற்றிவுடைய மக்கள் இடுக்கண் வருங்கால் அஞ்சலாமா?

உணவு கொள்ள மறுக்கின்ற குழந்தைகளுக்குத் தாய்மார்கள் எவ்வகையாலாவது ஒருபிடி சோறு அதன் வயிற்றுக்குப்போகுமாவென எத்தனைப் பாடுபடுகின்றார்கள்? தெருவில் வந்து காக்கையையழைத்துப் பூனையையழ்த்து அயலகத்துப் பிள்ளைகளையழைத்து அவர்களுக்கெல்லாம் சிறிது சிறிது உண்ணக் கொடுத்து பராக்குகள் பலப்பல காட்டித் தமது குழந்தைகளை ஊட்டி வளர்க்கின்றார்கள் அவர்கள். அதுபோலவே பேராசிரியர்கள் பல கதைகளைக் கூறி அவற்றின் இடையிடையே வரும் இன்பதுன்பங்களை யிடமாகக் கொண்டு, மிக நல்ல உறுதிகளை உலக மக்களுக்கு ஊட்டுகிறார்கள். காவியங்கள் செய்யும் பேருதவி இவைகள்தான். பெரியோர்கள் எந்தக் கதையைக் கூறினாலும் அவற்றை ஒரு நல்ல இலக்கியமாக்கி விடுகிறார்கள்.

இலக்கியம் என்பது என்ன? என மக்களை நோக்கி ஒரு வினா எழுப்பலாமாவெனக் கூட சில சமயங்களில் தோன்றுகின்றது. இலக்கியமன்றங்கள், இலக்கிய மாநாடுகள் எனப்பல வற்றினால் இலக்கியம் என்ற சொல் பலபடி பாராட்டப்

படட்டு வருவதைக் காண்கிறோம் ஒரு கூட்டத்தில் எத்தனை நேரமிருந்து கண்டாலும் ஒரு சிறு இலக்கியத்தின் நடமாட்டத்தையும் அங்குக் காணப்பெறுமல் ஏமாற்ற மடையவும் நேரிடுகின்றதுண்டு. இலக்கணம் இலக்கியம் என்ற சொற்கள் இலட்சணம் இலட்சியம் என்ற வடசொற்களினை ஒத்த சொற்கள்தான் என்பதில் மறுப்பில்லையானுல் இலட்சியம் என்ற சொல் குறிக்கோள் என்ற பொருளையுடைய தென்பதில் ஐயமில்லையல்லவா? இந்த உலக வாழ்விற்குக் குறிக்கோள்தான் என்ன? மக்களாகப் பிறந்தவர்கள் ஒன்று உலக இன்பத்தில் நன்ருக ஊறித் திளைக்க வேண்டும். பிறகு மக்களால் இவர் நல்லவரென்று வாழ்த்த வழி தேடவேண்டும். இவ்விரு இரண்டிற்கும் நடு நிற்கும் பொருளீட்ட முள்ளவர்களாக விளங்க வேண்டும். முடிவில் இவை யனைத்திலும் வெறுப்படையவும் வேண்டும். இந்த நான்கு நிலைகளையும் சுருங்கச் சொல்லும்போது அறம் பொருள் இன்பம் வீடு என்ற அழகான பெயர்களுக்குள் அடங்கி விடுகின்றன. அறிஞர்கள் எதைச் சொன்னுலும் எதையெழுதினுலும் எதை உள்ளினுலும் இந்த நான்கிலொன்றை மக்களுக்கு வலியுறுத்தியுரைக்க முற்படாவிட்டால், அப்பேச்சு ஒரு இலக்கியமல்ல. அந்த எழுத்தும் ஒரு இலக்கியமல்ல. அந்த எண்ணந்தானும் ஒரு இலக்கிய ஆக்கமுள்ள எண்ணமாக மாட்டாது. "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்ற அறிவுரையால் இது உறுதியாகின்றது.

ஒருகுதன் சூழ்ச்சியால் மாறுபட்டு மதம் பிடித்த ஒரு மாசுணக் கொடியோன் வன் செயலால் காடு போந்து கடுந்துய ரெய்திநிற்கும் தருமபுத்திரனுதிய அரும்பெரும் அன்பர்களுக்கு வருத்தம் நீக்க வந்து தோன்றியமாதவர் "இழுக்கலுடையுழி யூற்றுக்கோல் அற்றே" யெனத் தகுந்த ஒப்ப உரையாளர். "சஞ்சல மனத்தரானேர் நஞ்சலதுவமையில்லா நவை புரிந்தனர்களேனும் உம்மைப் போன்ற தரணிபர் சஞ்சலம் உறுதல் செய்யார் ஆதலின் (நீவிர்) அஞ்சலிர்" என்று கூறி ஆரணமுனியும் போனுன் என இக்கதை முகத்தால் வில்லியார் நல்கும் உள்ள உறுதிப்பாடு எத்துணையது. இடுக்கண் அழியாமையை நமக்குச் செவிவாயாக உண்பிக்க இத்தனை பாடுபடுகின்ருர் அல்லவா? படையெடுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு வஞ்சகர்க்கு அஞ்சலமாகநிற்க உறுதி கொள்வோமாக.

—தொடரும்

---

## வேண்டுகோள்.

சென்ற பதினைந்து ஆண்டுகளாகப் பாவை இயக்கத்தின் மூலம் நம் குழந்தைகளுக்குத் தெய்வீக உணர்ச்சியை ஊட்டிவரும் அன்பர்கள், வரும் மார்கழி மாதத்தில் தொடர்ந்து இப் பணியை நடத்த முன்வந்து அதற்கான காரியங்களை இப்பொழுது முதல் ஆரம்பிக்க வேண்டுகிறோம். அந்தந்த ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள், தங்கள் பள்ளியில் 5வது வகுப்பில் எத்தனை பேர் பாவைப் பாசுரங்களை மனப்பாடம் செய்ய ஆர்வமுள்ளவர்களாக இருக்கிருர்கள் என்ற விபரம் எழுதவேண்டுகிறோம். மார்கழி மாதத்தில் நடைபெறும் பாவை மகாநாடுகளில் சொற்பொழுவாற்றும் உபந்யாசகர்கள் ஆழ்வார்கள் சரித்திரம், நாயன்மார்கள் சரித்திரம் பக்த விஜயம் போன்ற பக்தி நூல்களைச் சிறுசிறு கதையாக உபன்யாசம் செய்ய **வேண்டுகிறோம்.** ஆலய நிர்வாக அதிகாரிகள் சென்ற பல வருஷங்களாக ஊக்கம் காட்டி இவ்வியக்கத்தை வளர்த்து வருவதுபோல், வரும் மார்கழி மாதத்திலும் பாவை மகாநாடுகளில் ஈடுபட்டுக், குழந்தைகள் பயன்பெறச் செய்ய வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். இப் பணியில் ஈடுபடும் ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர்கள் "**திருப்பாவை திருவெம்பாவை மத்தியக்குழு. 19, பெரிய கடைத் தெரு, மாயூரம்**" விலாசத்திற்கு எழுதிப் பாவை புஸ்தகம் பெற்றுக் கொள்ளவேண்டுகிறோம்.

# விடை விளக்கம்

(1) பிள்ளையார் சுழி என்பது, அகரம் உகரம் மகரம் ஆகிய மூன்றையும் அடக்கியுள்ள நாதப் பிரமம் ஆகிய ஓம் என்னும் பிரணவத்தின் ஆரம்ப வடிவம். அதில் உள்ள வட்டவடிவம் சிவசத்தி பீடம் எனும் ஆவிடை என்றும், நீண்டு நிற்கும் கோடு மூலத்தம்பம் எனும் சிவலிங்கம் என்றும், சொல்லப்படும். இவற்றை முறையே விந்து என்றும், நாதம் என்றும் வழங்குவர். மேலும் பிள்ளையார் சுழியின் வட்ட வடிவு மூலாதாரபீடம் எனவும், நீளவடிவு அதன்கண் எழும் பிரமநாடி எனவும், அது மூலக் கணபதி நிலயம் எனவும், அக் கணபதி சொரூபம் ஆகிய பிரணவாதாரம் எனவும், எழுத்துக்களின் வித்து எனவும், வேதத் தலைதரு பொருளாய் விளங்கும் மௌனக்குறி அல்லது ஊமை எழுத்து எனவும் நூல்களில் வழங்கப்படும். யாதேனும் ஒரு பொருள் பற்றியோ, செய்தி குறித்தோ எழுதுவதற்குத் தொடங்கும் முன்னர்ப் பிள்ளையார் சுழியினைத் தீட்டிக்கொள்வதானது, ஒருவன் தான் செய்ய மேற்கொள்ளும் செயலை இடையூறு இன்றி நிறைவேற்றி யருளுமாறு பிள்ளையார் திருவுருவினைப் பிடித்து வைத்து வழிபடுவதனைப் போன்றதாகும். பிரமப் பொருளாற் படைக்கப் பெற்ற பிண்டத்தின்கண் தாரக ஓங்காரம் எவ்விதம் அமைந்துள்ளதோ, அவ்விதமே 'ஓ' எனும் வடிவம் தமிழிலும், கிரந்தத்திலும் செவ்விதின் அமைக்கப்பட்டுள்ளது. அவ் ஓகாரத்தின் சுருங்கிய வடிவமே பிள்ளையார் சுழி என்பதாம். ஓகாரத்தின் ஓர் அடையாள வடிவமே, விநாயகர் ஆகிய பிள்ளையாரின் யானைமுக வடிவம் என்பது யாவரும் அறிந்ததொன்று.

(2) 'தேவாரம்' என்பது சைவசமய ஆசிரியர்கள் ஆகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் மூவரும் பாடிய பாடல்களைக் குறிக்கும். இச்சொற்குப் பலவகைகளிற் பொருள் கூறலாம்.

**(அ)** தே+வாரம். தே–தெய்வம். வாரம்–அன்பு. தெய்வத்தினிடத்து அன்பை விளைவிக்கும் பாடல்கள்.

**(ஆ)** தம்மை ஓதுபவர்க்குத் தெய்வத்தின் அன்பு, அருள் என்பவற்றை எளிதிற் கிடைக்கும்படி செய்யும் தன்மை வாய்ந்த பாடல்கள்.

**(இ)** தெய்வத் தன்மை பொருந்திய சிறந்த அன்பின் பயனாகப் பொங்கி எழுந்து வெளிப்பட்டருளிய பாடல்கள்.

**(ஈ)** தே+வாரம். வாரம்–இசை இயக்கம் நான்கனுள் ஒன்று. எனவே தெய்வம் சுட்டிய இசைத்திறன் (வாரம்) அமைந்த பாடல்கள்,

**(உ)** தே+வாரம். வாரம்–உரிமை. தெய்வத்திற்கே உரிமையுடைய பாடல்கள். அதாவது பிற புலவர்கள் பலர் போரும், காதலும் போன்ற பொருள்களைக் குறித்துப் பாடிப் போந்த பாடல்களைப் போல் அல்லாமல், தெய்வத்தினையே தமக்குரிய குறிக்கோட் பொருளாகக் கொண்டு வழுத்துதற்காக வெளிப்பட்ட பாடல்கள்.

**(ஊ)** தே+ஆரம். ஆரம்–மாலை. தெய்வத்திற்கு மாலைபோல விளங்கும் சிறந்த பாடல்கள்.

(எ) பூமாலை பொன்மாலை மணிமாலை முதலிய மாலைகள் போல்வனவற்றி னின்று வேறுபட்டு உயர்ந்து, தெய்வத்தன்மை பொலியும் சிறந்த பாமாலைகள்.

**திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள்** தம்முடைய உரைநூல்களில், 'தேவாரம்' என்பதைத் **திருநாவுக்கரசர்** பாடல்களுக்கே யுரிய சிறப்புப் பெயராக வழங்குவர். திருஞானசம்பந்தர் பாடலைத் 'திருக்கடைக்காப்பு' என்றும், சுந்தரர் பாடல்களைத் 'திருப்பாட்டு' என்றும் குறிப்பிடுவது அவர் வழக்கம்.

(3) 'திருமுறை' என்னும் பெயர் சைவசமய ஆசிரியர்கள் அருளிச் செய்துள்ள பாடல்களின் பன்னிரு தொகுதிகளுக்கும் உரியதொன்று. "சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்" என மணிவாசகரும், "திருவே என் செல்வமே தேனே" எனத் திருநாவுக்கரசரும் பாடியிருத்தலின், **திரு** என்னும் சொல் **சிவம்** எனப் பொருள் தரும். **முறை** என்பது **நெறி** என்று பொருள் பயக்கும். 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்னும் திருக்குறளில் வரும் முறை என்னும் சொல்லுக்கு ஆசிரியர் பரிமேலழகர் 'அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி' எனப் பொருள் கூறியிருத்தல் காணலாம். ஆதலின் திருமுறை என்பதற்கு, சிவ பரம் பொருளின்பால் நெறிப்படுத்தி உய்விக்கும் நூல்கள் எனப் பொருள் கொள்ளலாம்.

இனி, **திரு**–தெய்வத் தன்மை; **முறை**–நூல் எனவும் பொருள் கொள்ளுதல் பொருந்தும். முறை என்னும் சொல், **நூல்** என்னும் ஒரு பொருளையும் குறிக்கும். இவ்வுண்மையினை யுணர்த்தும் வண்ணம் இச்சொல்,

> "இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
> முறைவரை வேன்என முயல்வது ஒக்குமால்:
> அறுமுகம் உடையஓர் அமலன் மாக்கதை
> சிறியதோர் அறிவினேன் செப்ப நின்றதே"

எனவரும் கந்தபுராண அவையடக்கச் செய்யுளின்கண், ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் அவர்களாற் பயன்படுத்தப் பட்டிருத்தல் காணலாம். ஆதலின் தெய்வத்தன்மை மிக்க சிறந்த நூல்கள் எனவும், திருமுறை என்னும் சொற்குப் பொருள் உரைத்தல் அமையும்.

(அ) **திருஞானசம்பந்தர்** அருளியவை முதல் மூன்று திருமுறைகள். அவை தூய சிறந்த நடைநலனும், மிகுந்த இசையினிமையும், உயர்ந்த கலைத் திறனும் எழில் கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்து, இளமைக் குரிய பெருமித வளர்ச்சியும் வீறும் பெற்று, ஒப்புயர்வற்றுப் பொலிந்து விளங்குகின்றன.

(ஆ) **திருநாவுக்கரசர்** அருளியவை நான்கு, ஐந்து, ஆறும் திருமுறைகள். அவை அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, மக்கள் வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் உயரிய கருத்துக்களைத் திட்பநுட்பமுறச் சுவைபெருக உருக்கமாக அறிவுறுத்து கின்றன.

(இ) **சுந்தரமூர்த்தி** சுவாமிகள் அருளிச் செய்தது ஏழாம் திருமுறை. இவர்தம் பாடல்கள் கலையழகும், இசையினிமையும், நகைச்சுவை நலங்களும் பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் அனுபவ வாய்மைகளை, நம்மனோர் மனங் கொளத் தேற்றுகின்றன.

(ஈ) **மாணிக்கவாசகர்** அருளிய எட்டாம் திருமுறை. அழகிய இனிய கருத்துச் செறிவும் அயரா அன்பு நலனும், இறையருளுணர்வின் இணையிலாத் திறமும் நிரம்பி, எளிமை இனிமை தெளிவு முதலிய சிறப்புகள் அமைந்தது. கல்லைப் பிசைந்து கனியாக்க வல்ல உருக்கமும் நெகிழ்ச்சியும் உடையதாய், ஒப்புயர்வற்ற பக்திப் பெரு நூலாக மிளிர்கின்ற **திருவாசகம்** இதன்கண் அமைந்துள்ளது. சங்க கால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய அகப் பொருட் செய்திகளோடு, இறைவனின் அருட்டிறச் செய்திகளையும் இனிது இயைத்துக் கலைநல மெலாம் கனிய, மெய்யுணர்வு நுண்பொருட் கருத்துக்கள் செறிந்த செந்தமிழ்ப் பெருங்கருவூலம் ஆக, "காமம் சான்ற ஞானப் பனுவல்" எனக் குமரகுருபரர் பாராட்டும் நிலையில் சிறந்தோங்கித் திகழும்படி, மாணிக்கவாசகர் பாடியருளிய **திருச்சிற்றம்பலக் கோவையார்** என்னும் தெய்வத் திருநூலும், எட்டாம் திருமுறையிலேயே அமைந்துள்ளது.

(உ) ஒன்பதாம் திருமுறை என்பது **திருவிசைப்பா – திருப்பல்லாண்டு** என்னும் பதிகங்களின் தொகுதியாகும். திருப்பல்லாண்டு **சேந்தனார்** அருளியது. திருமாளிகைத்தேவர் கருவூர்த் தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடியது திருவிசைப்பா. கண்டராதித்த சோழ தேவர் (கி. பி. 949–957) பாடிய பாடல்களும், முதலாம் இராஜ ராஜ சோழன் (கி. பி. 985–1014) கட்டிய இராஜ ராஜேச்சரம் பற்றிய பாடல்களும், இராஜேந்திர சோழன் (கி. பி. 1012–1044) கட்டிய கங்கை கொண்ட சோழேச்சுரம் பற்றிய பாடல்களும் பிறவும் திருவிசைப்பாவில் அமைந்திருக்கின்றன.

(ஊ) பத்தாம் திருமுறை **திருமூலர்** அருளிய **திருமந்திரம்.** இது யோக ஞான நுண்பொருள்கள் பலவற்றை விளக்குவது. 'ஞானமுதல் நான்கும் மலர் நற்றிருமந்திரமாலை' எனச் சேக்கிழார் இதனைப் புகழ்ந்துள்ளார். இஃது ஏறத்தாழ மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.

(எ) பதினொன்றும் திருமுறை திருஆலவாயுடையார் **திருமுகப்பாசுரம்** முதலாக, காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள் என்போர் இயற்றிய 40 பிரபந்தங்களைத் தன்கண் கொண்டிருப்பது.

(ஏ) பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார் இயற்றிய **பெரியபுராணம்** ஆகும். தமிழகத்தின் சமய—சமுதாய—கலாசார—வரலாற்றுப் பெருங்களஞ்சியம் எனத் தலைசிறந்து விளங்குவது பெரியபுராணம். இதனைத் தமிழ்நாட்டின் தேசிய காவியம் (National Epic) எனக் கூறுவது மிகப் பொருந்தும்.

(4) சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் தோன்றி யருளியவர் எதிராசர் என்னும் **இராமாநுஜர்.** இவ்வுண்மை,

> "இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்ததிரு ஆதிரைநாள்
> என்றையிலும் இன்றிதனுக்கு ஏற்றம் என்தான்? —என்றவர்க்குச்
> சாற்றுகின்றேன் கேண்மின். எதிராசர் தம்பிறப்பால்
> நாற்றிசையும் கொண்டாடும் நாள்"

"ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும்
வாழ்வான நாள்நமக்கு மண்ணுலகீர்! —ஏழ்பாரும்
உய்யஎதி ராசர் உதித்தருளும் சித்திரையில்
செய்ய திருவா திரை"

என மணவாளமாமுனிகள் அருளிச் செய்த **உபதேச ரத்தினமாலைச்** செய்யுட்கள் கொண்டு உணரலாம். மேலும்,

"இப்படி இருப்பதொரு மாதமும் நட்சத்திரமும் நேர்படுவதே! ஸ்ரீமானான பெருமாள் அவதரித்த ஸ்ரீமானான மாசமும், அவர் அவதரித்த நட்சத்திரத்தோடு அடுத்து அணித்தான நட்சத்திரமும் ஆய்த்து. இவரும் சீமான் இளையாழ்வார் இறே. இராம அநுஜர்கள் இருவர்க்கும் முன்னும் பின்னுமான திருவாதிரையும் புனர் பூசமும் ஆகப் பெற்றது. இத்தைப் பொதுவிலே திருநட்சத்திரம் என்றுய்த்து பூருவர்கள் அருளிச் செய்து போருவது. யதுகுலநாதன் (கண்ணபிரான்) உடைய அவதாரத்தைக் காட்டிலும், அதிசயத்தையுடைத்தாய் ஆய்த்து யதிகுல துர்யர் ஆன இவர் (இராமாநுஜர்) உடைய அவதாரம் இருக்கும்படி; அவ்வவதாரத்துக்குப் பிரயோ ஜநம் தேரிலேயிருந்து ஒருவனுக்குத் தெளிவு பிறக்கும்படி எல்லாம் எடுத்துரைக்க வேண்டிற்று. இவ்வவதாரத்துக்குப் பிரயோஜநம் பாரிலேயிருந்து எல்லாரையும் பதஸ்யராய் உஜ்ஜீவிக்கும்படி முடிந்ததொரு வார்த்தையாய்த்து உபதேசித்தது".

என அவற்றிற்குப் **பிள்ளை லோகஞ்சீயர்** செய்தருளியுள்ள வியாக்கியானம் கொண்டும் இதனைத் தெளியலாம்.

இவ்வாறே சித்திரைத் திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்தவர் ஆளுடைய பிள்ளையார் என்னும் **திருஞானசம்பந்தர்** ஆவார். இவ்வுண்மை பின்வரும் செய்யுட்களால் தெளியப்படும்.

"அருக்கன்முதற் கோள்அனைத்தும் அழகியஉச் சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப் பேணியநல் ஓரைஎழத்
திருக்கிளரும் ஆதிரைநாள் திசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க"

—பெரிய புராணம், சேக்கிழார்.

"ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும்
அவர்அமுது திருஞானம் அமுதுசெய்த நாளும்
சூளுடை ஆதிரைநாளாம் சித்திரை ஆதிரைநாள்"

—திருத்தொண்டர்புராண வரலாறு,
உமாபதிசிவம்.

(5) 'நாயனர்' என்னும் சொல்லைக் கருதி, சேரமான் பெருமாள் நாயனர் போல, இவரையும் சைவர் போலும் என ஒரு சிலர் மயங்குதல் கூடும். ஆனல் இவர் ஒரு சிறந்த வைஷ்ணவப் பெரியார் ஆவர். இவர் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் **புதல்வர்.** பிள்ளை லோகாசார்யர் என்பவரின் **தம்பி.** நம்பிள்ளை என்னும் ஆசார்யரின் **மாணவர்.** ஆசார்ய இருதயம், திருப்பாவை ஆருயிரப்படி வியாக்கியானம், அமலனுதி பிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு என்பவற்றிற்கு வியாக்கியானம் முதலிய

நூல்களை அருளிச் செய்தவர். கிடாம்பியாச்சான் திருமலை நாயனர், கூர குலோத் தமதாசர் என்பவர்கள் இவருடைய மாணவர்கள். திருவரங்கத்தில் தோன்றித் திருவரங்கத்திலேயே வாழ்ந்தவர். கி. பி. 13-ஆம் நூற்ருண்டில் விளங்கியவர்.

வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர் என்பவர் இவரின் வேருன மற்ருெரு சான்ருேர். அவர் பெரிய வாச்சான் பிள்ளையினுடைய மாணுக்கர்; திருவாய் மொழிக்குப் பன்னீராயிரப்படி என்னும் வியாக்கியானம் எழுதியவர்.

நஞ்சியர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு
எஞ்சாமை யாவைக்கும் இல்லையே—தஞ்சீரால்
வையகுரு வின்தம்பி மன்னுமண வாளமுனி
செய்யுமவை தாமும் சில.

—உபதேசரத்தின மாலை

1. **வையகுரு** — பிள்ளைலோகாசார்யர்

2. **மணவாளமுநி**— அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர்

3. **செய்தவைசில** — ஆசார்ய இருதயம், திருப்பாவை ஆருயிரப்படி, அமலனுதிபிரான் உரை, கண்ணிநுண் சிறுத்தாம்பு உரை.

6. முன்பு ஒரு சமயம் ஒருபடை எடுப்பில் கொடியவர்கள் சிலர், திருவரங்கம் அழகிய மணவாளப் பெருமாளையும் மற்றும் சில திருவுருவங்களையும் கவர்ந்து கொண்டு, வடக்கே எடுத்துச் சென்று விட்டனர். அப்போது அதுகண்டு "எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டு" என்றபடியே தரிக்க மாட்டாத ஒரு பெரும் அன்பர் "இருநிலம் கை துழாவிக் கொண்டு" மிகவும் வருந்தி முயன்று வடக்கே சென்ருர். அவ்வரசனைக் கண்டார். தம்முடைய இசைத்திறனல் அவன் மனத்தை உருகும்படி செய்து மகிழ்வித்தார். அப்போது அவன் 'உமக்கு வேண்டுவது என்ன?' என்று வினவினன். 'அதற்கு நம்முடைய பெருமாள் இங்கு வந்தார், அவரைத் தரவேண்டும்' எனக் கேட்டார். அதற்கு அவன் 'இருந்தாற் கொண்டுபோம்' என்று பல விக்கிரகங்களையும் கொணர்ந்து காட்டு வித்தான். அவைகளுள் ஒன்றும் அல்லாமை கண்டு அன்பர் பெரிதும் வருந்தினர். பிறகு அவ்வரசன் தன்புதல்வி தன் அந்தப் புரத்தில் வைத்துப் போற்றி மகிழ்ந்து கொண்டிருந்த திருவுருவம் ஒன்றினைக் கொணர்வித்து, 'இதுவோ உம்முடைய பெருமாள்?' என்று வினவினன். 'அரங்கம் ஆளி என் ஆளி" என்றும் "என் அரங்கத்து இன்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர்" என்றும் அருளிய படியே, தம் அழகிய மணவாளப் பெருமானை அடையாளம் கண்டு, 'இவர் தாம் நம் பெருமாள்' என்று நயந்து கூறி, அவ்வரசனின் இசைவு பெற்று மீட்டு எடுத்து வந்து, திருவரங்கம் கோயிலிலே எழுந்தருளுவித்தார். இவரே **இராஜகண்ட கோபாலர்** என்னும் விண்ணப்பம் செய்வார். இவ்வரலாறு,

"நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால் ......"

எனவரும் பாடலுரையில் **பிள்ளைலோகஞ் சீயர்** அவர்களாற் கூறப்பட்டுள்ளது.

7. இஃது **உய்யக்கொண்டார்** என்பவர்க்கு உரிய வாழித் திருநாமம். இவர் **நாதமுனிகள்** மாணவர். **மணக்கால் நம்பிகள்** முதலியவர்களின் ஆசிரியர். இவர் சித்திரை மாதம் கார்த்திகை நாளில் திருவவதரித்தவர்.

"வாலவெய்யோன் தனைவென்ற வடிவழகன் வாழியே
மால்மணக்கால் நம்பிதொழும் மலர்ப்பதத்தோன் வாழியே
சீலமிகு நாதமுனி சீர் உரைப்போன் வாழியே
சித்திரையிற் கார்த்திகைநாள் சிறக்கவந்தோன் வாழியே
நாலிரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான் வாழியே
நாலெட்டின் உட்பொருளை நடத்தினான் வாழியே
மால்அரங்க மணவாளர் வளமுரைப்போன் வாழியே
வையமுய்யக் கொண்டவன்தாள் வையகத்தில் வாழியே"

1. நால் இரண்டு — எட்டெழுத்தையுடைய திருமந்திரம்.
2. ஐயைந்து — 25 எழுத்துக்களையுடைய துவயம்
3. நால் எட்டு — 32 எழுத்துக்களையுடைய சரம சுலோகம்

8. திருத்தணிகை என்னும் தலத்தின் பெயரைக் கேட்டதும் அங்கேயுள்ள முருகன் **கோயில்** மட்டுமே பெரும்பாலும் நமக்கு நினைவு வருகின்றது. ஆனால் அங்கே ஒரு சிறந்த **சிவபிரான்** கோயிலும் உள்ளது. அக்கோயிலுக்கே 'வீராட்டகாசம்' என்று பெயர். முருகப் பெருமான் பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசிக்கக் கேட்டுமகிழ்ந்த சிவபிரான், இத்துணைச் சிறந்த இந்த நம் மைந்தனால் உயிர்களை வருத்தும் ஆணவமலம் ஆகிய பகையும், தேவர்களை வருத்தும் சூரபதுமன் ஆகிய பகையும் அழிந்தொழிதல் திண்ணம் என்று கருதி, வீரவுணர்ச்சி பெருக அட்டகாசம் செய்து ஆர்ப்பரித்து இன்புற்று நின்றான். இங்ஙனம் வீர அட்டகாசம் புரிந்ததனால், இத்தலத்துச் சிவபிரான் கோயிலுக்கு இப்பெயர் அமைந்தது.

அட்டகாசம் — வெடிச் சிரிப்பு. மந்தகாசம் — புன்சிரிப்பு.

சாரும்எவ் வுயிரும் தன்வயம் ஆக்கித்
தளர்க்கும் ஆணவப் பகையோடும்,

சூரனை முதலாம் துளக்கறும் பகையும்
துலங்கும்இப் பிரணவப் பொருளாம்

வீரனில் இன்றே விளிந்தது என்றுரைத்து
விரைந்தெழும் வீரத்தின் குறிப்பில்

ஆர்அமர் முடியோன் ஆர்த்தலின் ஆயது
அவ்விடம் வீராட்ட காசம்

—தணிகைப்புராணம்

இச் சிவபிரான் கோயில் கி. பி. 890-ஆம் ஆண்டில் **நம்பியப்பி** என்ற ஒரு சிறந்த அன்பரால் கட்டப்பெற்றது. பல்லவர் மரபில் வந்த இறுதி அரசனும், நிருபதுங்கன் என்னும் மன்னனின் புதல்வனும் ஆகிய **அபராஜித வர்மன்** (கி. பி. 875—893), இக் கோயிலைக் கட்டுவித்த நம்பியப்பியினைப் புகழ்ந்து பாராட்டிய வெண்பாச் செய்யுள் ஒன்று அக்கோயிலிற் காணப்படுகின்றது. வரலாற்றுச் சிறப் புணர்த்தும் அக்கல் வெட்டுச் செய்யுள் வருமாறு:—

"திருந்து திருத்தணியிற் செஞ்சடை ஈசற்குக்
கருங்கலாற் கற்றளியா நிற்க — விரும்பியே
நற்கலைகள் எல்லாம் நவின்றசீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து." —கல்வெட்டுச் செய்யுள்

9. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிக முக்கியமாக அமைய வேண்டிய ஐந்து அங்கங்கள், பஞ்ச சம்ஸ்காரங்கள் எனப்படும். இவை முறையே **தாபம், புண்டரம், நாமம், மந்திரம், யாகம்,** என வழங்கும். (1) சங்கமும் சக்கரமும் ஆகிய இவற்றின் இலச்சினையைத் தோள்களில் அணிதல். (2) நெற்றியில் திருமண்காப்பு அணிதல் (3) 'தாசன்' என்னும் பெயர் தரித்தல். (4) திருமந்திரத்தை உச்சரித்தல் (5) திருமகள் நாதனை ஆராதித்தல் என்னும் ஐந்தும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு இன்றியமையாத சிறப்பு அங்கங்கள் ஆகும். இவ்வைந்து அங்கங்களையும் உடையவர்கள் ஆதல் பற்றியே **ஐயங்கார்** என்ற வழக்காறு ஏற்படுவதாயிற்று.

10. இப்பெயர்களில் ஒருவகையில் சொல்லொப்புமை காணப்படுகின்றதாயினும், இவை யிரண்டும் தனித்தனி வெவ்வேறு தலங்களைக் குறிப்பவையாகும். **திருநின்றியூர்** மாயூரத்தில் இருந்து சீர்காழி செல்லும் பாதையில் ஏறத்தாழ ஆறு கல் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்தர், சுந்தரர் திருப்பதிகங்கள் பெற்றது. **திருநின்றவூர்** என்பது சென்னை அரக்கோணம் இருப்புப் பாதையில், சென்னைக்கு அணித்தே யுள்ளது, 'தின்னனூர்' என இப்போது மருவி வழங்குகின்றது. அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவர் ஆகிய **பூசலார் நாயனர்** தோன்றி வாழ்ந்து மனக்கோயில் கட்டி வழிபட்ட தலம். ஆதலின் இங்குள்ள சிவபிரான் 'இருதய ஆலய ஈசுவரர்' எனப் பெயர் பெறுவர். ஆசிரியர் சேக்கிழார் இத்தலத்தினைப் பின் வருமாறு புகழ்ந்து போற்றியுள்ளார்.

"உலகினில் ஒழுக்கம் என்றும் உயர்பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கும் மூதூர்;
குலமுதற் சீலம் என்றும் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி நிகழ்திரு நின்ற வூர்ஆம்." —பெரிய புராணம்

திருநின்றவூர் ஒரு சிறந்த வைஷ்ணவத்தலமும் ஆகும். திருமங்கையாழ்வார் தம்முடைய பெரிய திருமொழியில் இத்தலத்தினை மங்களா சாசனம் செய்துள்ளார். (1089, 1642) "நின்றவூர் நித்திலம், நித்திலத் தொத்து" என்று அவர் இங்குள்ள பக்தவத்சலப் பெருமாளைக் குறிப்பிட்டருளியுள்ளார், என்னைப் பெற்ற தாயார்; ஸ்ரீநிவாச விமானம்; விருத்தக்ஷீர நதி, வருண புஷ்கரிணி; வருணனுக்குப் பிரத்தியட்சம்.

—ஆசிரியர்.

# திருவல்லிக்கேணிக் கல்வெட்டுக்கள்*

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனூர், M.A.M.O.L.Ph.D.

## முன்னுரை

இன்றுள்ள சென்னை நகரம் பழைய ஊர்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இப் பகுதியைப் பார்வையிட்ட யவன வழிப்போக்கனான தாலமி என்பவன் மயிலையை 'மயிலார்ப்பன்' என்று குறித்துள்ளான். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் கடற்கரையூரான திருமயிலையைப் பாடியுள்ளனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பேயாழ்வார் திருவல்லிக்கேணியில் கோவில் கொண்டுள்ள தெள்ளிய சிங்கப் பெருமாளைப் பாடியுள்ளார். அவர் காலத்தவர் என்று கருதத்தகும் மதுரகவியாழ்வார் 'மயிலையைச் சேர்ந்த திருவல்லிக்கேணி' என்று பாடியுள்ளார். கி. பி. எட்டாம் நூற்றாண்டினரான திருமங்கையாழ்வாரும் திருவல்லிக்கேணி மயிலையைச் சேர்ந்த பகுதியென்றே பாடியுள்ளார். அவர் காலத்து மன்னனான இரண்டாம் நந்திவர்மனுக்கு மகனான தந்திவர்மன் (கி. பி. 775-826) காலத்துக் கல்வெட்டு, திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி கோவிலில் உள்ளது. அதுதான் அக்கோவில் கல்வெட்டுக்களுள் பழமையானது.

## கல்வெட்டுக்கள்

மேற்கூறப் பெற்ற தந்திவர்மன் காலத்துக் கல்வெட்டோடு பன்னிரண்டு கல்வெட்டுக்கள் அக் கோவிலில் உள்ளன. அரசர்கள், அரசியல் அலுவலர், வணிகர்கள், கோவில் பணிமக்கள், பொதுமக்கள் முதலியோர் கோவிலில் பலவகை விளக்குகள் எரிப்பதற்கு ஆடுகள், பசுக்கள், நிலங்கள், காசுகள் முதலியவற்றை ஊரவையாரிடம் அல்லது ஆட்சியாளரிடம் அல்லது கோவில் குருக்களான சிவப்பிராமணரிடம் அல்லது பட்டர்களிடம் ஒப்புவித்தல் வழக்கம்; இவ்வாறே கோவில் வழிபாட்டிற்கும், விழாக்கள் முதலியவற்றிற்கும் நிலத்தையும் பணத்தையும் கொடுப்பது வழக்கம்; கடவுளர் திருவுருவங்களை எழுந்தருளச் செய்து அவற்றின் பூசை விழாக்களுக்காக நிலத்தையோ, காசையோ கொடுப்பதும் உண்டு. பழைய கோவில் அழிந்தவிடத்துப் புதிய கோவில்களைக் கட்டுவித்தலும் உண்டு. இத்தகைய அறங்கள் என்றும் நடைபெறுவதற்காகவே கோவில் சுவர்களில் அவைபற்றிய விவரங்கள் வெட்டப்பட்டுள்ளன. அக் கல்வெட்டுக்களில் அவை வெட்டப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த அரசர் பெயர்களும் அவர்தம் வீரச்செயல்களும், அக்கல்வெட்டுக்கள் எழக் காரணமான அறங்கள் பற்றிய விவரங்களும் பொறிக்கப்படுதல் அக்கால வழக்கம். இனிக் கல்வெட்டுக்களில் காணப் பெறும்விவரங்களை இங்குக் காண்போம்:

## அரசர்கள்

| | |
|---|---|
| தந்திவர்ம பல்லவன் | கி.பி. 775-826 |
| திரிபுவனசக்கரவர்த்தி குலசேகர பாண்டியன் | கி.பி. 1268-1311 |
| சதாசிவராயர் | கி.பி. 1542-1565 |
| வேங்கடபதி ராயர் | கி.பி. 1585-1614 |
| சீரங்கராயர் | கி.பி. 1614 |

## அறங்கள்

(1) கோவில் பட்டர்கள் கோவிலுக்குரிய நிலத்தை அடைமானம் வைத்துவிட்டனர். இதனால் கடவுள் படையலுக்குரிய நெல்லில் நாற்பத்தைந்து காடி நெல் குறைந்துவிட்டது. தந்திவர்மன் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 786இல்) புகழ்த்துணை விசயரையன் என்பவன் அந்நிலத்தை மீட்டுக் கொடுத்தான்.

(2) குலசேகர பாண்டியன் காலத்தில் அயனபுரத்து அயனபுரங்கிழவன் செழிய தரையனும், நின்ற நம்பியும், தெள்ளிய சிங்க நாயனூர்க்குரிய புதுப்பாக்கத்தில் தமக்குச் சொந்தமான நிலங்களைக் கோவிலுக்குத் தானம் செய்தனர்.

* இக்கட்டுரை 1903-ஆம் ஆண்டு வெளியான கல்வெட்டுக்களின் (234-243 A) துணையைக் கொண்டு எழுதப்பெற்றது.

(3) சதாசிவராயர் காலத்தில் (கி.பி. 1564) 1565) பள்ளிகொண்ட பெருமாள், மகா லட்சுமியார், பூமிதேவியார், நரசிங்கப் பெருமாள், வராக நாராயணப் பெருமாள், சேஷன், கிருஷ்ணன், ருக்மிணிதேவி, மதன், அனுருத்திரன், சாத்தகியாழ்வார் ஆகியோர் திருவுருவங்களை நரசிங்கதாசன் எழுந்தருளுவித்தான்; வேதவல்லி நாச்சியார்க்கு உற்சவ விக்கிரகம் செய்வித்தான்; பள்ளிகொண்ட பெருமாள் கோவிலும், கிருஷ்ணன் கோவிலும், முன்மண்டபமும், வேதவல்லி நாச்சியார் கோவிலும், திருவாய்மொழி மண்டபமும், திருமடைப்பள்ளியும், அடையவளைந்தான் திருமதிலும், திருஆபரணங்களும் செய்வித்தான். புதுப்பாக்கம், வேப்பேரி, வேசாறுபாடி (வியாசர்பாடி) ஆகிய கிராமங்கள் தெள்ளிய சிங்கப் பெருமாளுக்குத் தேவதானமாக விடப்பட்டன.

(4) முதலாம் வேங்கடபதிராயர் காலத்தில் (கி.பி. 1599-இல்) சேனைமுதலியாரும் கோயில் தானத்தாரும் அதிகாரி, கொப்பூரி ஒபராசையன் முத்திரை எதிராசரும், திருமயிலாப்பூர் நாச்சியண செட்டியாரும் - சித்திரைத் திருநாள் திருத்தேர் உபயத்துக்கும் தீர்த்தவாரி உபயத்துக்கும் பல பொருள்களைக் கொடுத்தனர்.

(5) அதே அரசன் காலத்தில் (கி.பி. 1603-இல்) தெள்ளிய சிங்கப் பெருமாள் ஸ்ரீ காரிய துரந்தரரான ஸ்ரீமந் மகா மண்டலேசுவரர் கொப்பூரி ஒபராசைய தேவ மகாராசரும், தானத்தாரும், தானசமையமும் தெள்ளிய சிங்கப்பெருமாள் திருக்கோயிலில் திருமழிசை யாழ்வார் திருவுருவத்தை யெழுந்தருளுவித்து, அவரது பூசைக்கு அனுமஞ்சி பல்லே எம்பெருமானர் கொடுத்த வராகன் இருபது ஏற்றுக்கொண்டு வேண்டுவன செய்வதாக ஒப்புக்கொண்டனர்.

(6) அதே அரசன் காலத்தில் மேலே கூறப்பெற்ற மகாமண்டலேசுவரரும் தானத்தாரும் தான சமையமும்—தெள்ளிய சிங்கப் பெருமாள் கோவில் மகாமண்டபத்திலுள்ள பாஷியகாரர் (இராமாநுசர்) திருவுருவத்திற்குப் படையல் இட ஒப்புக்கொண்டனர்.

(7) முதலாம் வேங்கடபதிராயர் (கி. பி. 1585-1614) காலத்தில் தெள்ளிய சிங்கப் பெருமாள் கோவிலுக்குச் செம்பம் (செம்பியம்), நிடாம்பரம் (நெடும்பரை) என்னும் சிற்றூர்களும் ஒரு தோட்டமும் அந்த அரசரின் சேனைத்தலைவரான திருமலை நாயங்காடு என்பவரால் கொடுக்கப்பட்டன. அவற்றின் வருவாய் இருநூறு ரேக சக்கிரநத்தியாணம் (அக்கால நாணயத்தின் பெயர்). இந்த வருவாய் இரண்டாம் சீரங்கதேவ மகாராயர் காலத்தில் கோவிலின் பல செலவுகளுக்கு ஒதுக்கப்பட்டன.

(8) தெள்ளிய சிங்கப் பெருமாள் ஆடித் திருவிழாவில் சிங்கம நாயக்கரா செல்வன் என்பவன் ஒருநாள் செலவை ஏற்றுக்கொண்டான் (காலம் தெரியவில்லை).

9. " நாச்சியார் சந்நிதியிலே ஒரு நம்பியாரும் ஆக மூன்று பேரும் ஒரு பரிசாகவும், சந்நிதியிலே காத்திருக்கக் கடவோமாகவும்," என்பது ஒரு கல்வெட்டு வாசகம். இது முற்றுப் பெறாத கல்வெட்டு, முதலும் இல்லாதது.

## பொதுச் செய்திகள்

(1) இக்கோவில் கல்வெட்டுக்களுள் ஒன்பது, திருவல்லிக்கேணித் தெள்ளிய சிங்கப் பெருமாளுக்குரியவை; பார்த்தசாரதிப் பெருமாளுக்கு உரியவை அல்ல என்பது கவனிக்கத்தகும்.

(2) தலைக்கோட்டைப் போருக்குப் பின்னர் விசயநகரவேந்தர் பெனுகொண்டாவைத் தலைநகராகக் கொண்டனர். அதன் தமிழ்ப்பெயர் பெருங்கொண்டை என்று இக்கோவில் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

(3 இக்கோவிலிலுள்ள விசயநகர வேந்தர் கல்வெட்டுக்களின் தொடக்கம் "ஸ்ரீமதே ராமாநுஜாய நமஹ" என்று தொடங்குதல் குறிப்பிடத்தக்கது. சதாசிவராயர் காலத்துக் கல்வெட்டில் இத்தொடக்கத்துடன், "ஸ்ரீபட்டர் திருவடிகளே சரணம்' என்பதும் சேர்க்கப்பட்டுள்ளது.

(4) இக்கோவிலுக்குச் சென்னையிலுள்ள செம்பம் செம்பியம்), வேசாறுபாடி (வியாசர்பாடி, புதுப்பாக்கம், வேப்பேரி ஆகிய சிற்றூர்கள் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டவை.

(5) தொண்டை நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் புலியூர்க் கோட்டம் ஒன்று. அக்கோட்டத்து உள்நாடுகளுள்

எழுமூர் (எழும்பூர்) நாடு ஒன்று. திருவல்லிக்கேணி அந்நாட்டைச் சேர்ந்தது என்பது கல்வெட்டால் தெரிகின்றது 'அயனபுரம்' என்பது இன்றுள்ள 'அயனவரம்' என்பதாகும். அது, புழல் கோட்டத்துத் துடர் முள்ளி நாட்டைச் சேர்ந்தது,

(6) சதாசிவராயர் காலத்தில் நரசிங்கதாசன் என்பவன் பள்ளிகொண்ட பெருமாள் முதலிய கடவுளர் பலர்க்கும் கோவில்களையும் மண்டபங்களையும் அமைத்தான் என்பதை நோக்க, அக் கடவுளருக்கென்று இருந்த பழைய கோவில்களும் பெருங்கோவிலுக்குரிய திருமதிலும் மடைப்பள்ளியும் பிறவும் எக்காரணத்தாலோ அழிந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட சோழப் பேரரசர்களின் கல்வெட்டுக்கள் இக் கோவிலில் இல்லாதிருத்தல் வியப்புக்குரியது. அக்கல்வெட்டுக்களைக் கொண்ட பழைய கோவில் இருந்து காலப் போக்கில் அழிந்ததுபோலும்! இன்றுள்ள கோவில் கட்டப்பட்டபொழுது அக் கல்வெட்டுக்களைக் கொண்ட கற்கள் கிடைக்கவில்லைபோலும்! மேலும் காலத்தால் முற்பட்ட தந்திவர்மன் காலத்துக் கல்வெட்டு கருவறையின் நுழைவாயில் தரையில் பதிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டும்பொழுது இக்கல்வெட்டு அங்கு இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

(7) கருவறைக்கு எதிரில் உள்ள மண்டபத் தரையில் இரண்டு சிதைந்த கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் புலியூர்க்கோட்டத்துக் கோட்டூர் நாட்டுத்திருவான்மியூர் ......ஆமூர்க் கோட்டத்து விக்கிரம சோழப் பேரளம்" என்பது குறிக்கப்பட்டுள்ளது. இது பார்த்தசாரதி கோவிலைச் சேர்ந்ததாகவே கொள்ளினும் இழுக்கில்லை. அடுத்த கல்வெட்டு மூன்றும் இராஜராஜன் இருபத்துமூன்றும் ஆட்சி யாண்டைக் (கி.பி. 1238) குறிப்பது. அதனில், "ஈக்காட்டுக் கோட்டத்துத் திருப்பாசூர்———சிவப்பிராமணரில்———. திருச்சிற்றமபல பட்டனும் உலகாளுடையானை ———விளக்கு எரிப்பதாகச் சிலாலேகை பண்ணிக் கொடுத்———" என்பது காணப்படுகிறது இக் கல்வெட்டு இப்பெருமாள் கோவிலைச் சேர்ந்தது அன்று என்பது தெளிவாகும்.

(8) கோவில் முற்றத்திலும் மண்டபத்தரையிலும் உள்ள முப்பத்தொன்பது கற்களில் எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்பது கற்களில் கீழ்வருவன குறிக்கப்பட்டுள்ளன.

(1) தேவகன்மிகளுக்கும் மாஹே ———

(2) பலமண்டல ஸ்ரீமாஹே———

(3) ஆளுடையார் திருவான்மியூருடை(யார்) கழுமலவூர்பக்கல் கொண்ட அன்றாடு நற்புதுக்காசு— ———

(4) — ———டுத் திருவான்மியூர் உலகாளுடைய நாயனுர்க்கு-————திருநந்தாவிளக்கு

(5) திரிபுவன—— மது —சோழதேவற்கு யாண்டு இருபத்திரண்டாவது ——— நாயனுர் கோவில்.........தேவரடியாள் ...........பன்மாஹே (ஸ்வர ரக்ஷை.)

(6) இவ்வூர் ஸ்ரீ காஞ்சியில் ...... ... (பன்) மாஹேஸ்வர ரக்ஷை)

(7) உடையார் உலகாளுடைய நாயனர் ருத்தண்டீசுரமுடைய நாயனர் கோயில்

(8) .........யாண்டு ஆருவது குலோத்துங்க சோழ வளநாட்டுக் கோட்டூர் நாட்டுத் திருவா (ன்மியூர்)........ கு ஒன்றுக்கு விட்ட பசு ஒன்றும் நாகு மூன்றும் ஆக உ (கு)............

இவ்வெட்டுக் கல்வெட்டுச் செய்திகளும் சிவன் கோவிற் செய்திகள்—சிறப்பாகத் திருவான்மியூர்ச் சிவன் கோவிற் செய்திகள் என்பன தெளிவாகும். இக்கல்வெட்டுத் துண்டுகள் இங்கு எவ்வாறு வந்தன?

பம்மல் சிவன்கோவில் அழிந்துபட்டது. அக் கோவிற் கல்வெட்டுக்கள் திருநீர்மலை அடிவாரத்திலுள்ள இராமர்கோயிற் சுவர்களில் வைத்துக் கட்டப்பட்டிருத்தலை இன்னும் காணலாம். அது

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

எம்பெருமானும் "தேவரீர் கோயில்பிள்ளை யாகையாலும், கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும், எங்கும் திரிந்து விளையாடுபவர்" என்பதை அடியேன் அறியேனோ? ஆகவே எங்கணும் தேவரீர் கிருபையாலே சென்று அங்கங்குள்ள உள்ளக் கரம்பைகளை யெல்லாம் பொடித்துப் பதமாக்கித் திருத்தித் தேவரீர் திருவடிகள் நோவாமே நடைபோட உரித்தாக்கித் திரும்பி விடை கொண்டேன் ஸ்வாமீ !" என்று விண்ணப்பித்தார். பெருமாளும் திருவுள்ள முவந்து 'நன்று செய்தீர்' நும் அணைத்துக் கொத்தும் உடன்வர இனி மடத்துக்கு எழுந்தருளும் என்று விடை கொடுத்தருள உடையவரும் மீண்டும் பெருமாள் அழகை மனமார அனுபவித்து, தெண்டம் சமர்ப்பித்து எல்லாப் பரிகர பரிவாரங்களும் புடைசூழ மடத்துக் கெழுந்தருளினர்.

இங்ஙனம் உடையவர் திருவரங்கம் மீண்ட வரலாற்றை "மறைகளாயிரமும் உணர்ந்தவன் வணங்க, வானவர் தொழுதெழும் அரங்கத்திறைவனும் பணிந்த எதிகள் நாயகனை இருகணால் நோக்கி, ஆசறஓர் குறையற எங்கும் திரிந்த நம் செங்கோல் கோவுண்மை செலுத்தி மீண்டனையோ? பொறையெலாம் திரண்டோர் உருவெடுத்தோங்கும் புண்ணியா, என்று இறை புகழ் உடையவரும்,

"வந்தேற்குண்டோ குறைகள் அருள்
மாமாயவனே மாதவனே

செந்தேன் ஒழுகும் பூம்பொழில் சூழ்
சீரார் அரங்கத் தின்னமுதே

நொந்தேன் சரணம் என்றவர்கள்
நோய்தீர் மருந்தே நுண்ணியனே

தந்தேன் என்னை உனக்கென்றன்
தலைவா சரணம் எனத்தாழ்ந்தே"

"வணங்கி வாழ்த்தி வலம் செய்து
மாசிலாத எதிநாதன்

இணங்கும் அடியார் புடைசூழ
இறைஞ்சி மடம்புக்கு அப்பதியில்

குணங்கள் மிக்க அருளாளப்
பெருமாள் கூரத்தாழ்வானும்

அணங்கின் பொருட்டால் இதம் உரைத்த
ஆண்டான் முதலோர் அடிபரவ"

---

—90 ஆம் பக்கம் தொடர்ச்சி

போலச் சதாசிவராயர் காலத்துக்கு முன்பு எக் காரணத்தாலோ திருவான்மியூர்ச் சிவன்கோவிலைச் சேர்ந்த எழுத்துக்களைக் கொண்ட கற்கள் சில, பார்த்தசாரதி கோவிலைப் புதுப்பிக்கப் பயன் பட்டன என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

(9) விசயநகர வேந்தர் ஆட்சிக் காலத்தில் 'வராகன்', 'ரேக சக்கிர கத்தியாணம்' என்பவை நாணயங்களின் பெயர்களாக வழங்கின என்பது தெரிகிறது.

(10) நாம் இக்காலத்தில் ஒரு படி அரிசி என்கிறோம். படி என்னும் சொல் வழக்கு மிகப் பிந்தியது. நாழி என்பதே முற்பட்ட வழக்காகும்.

(11) கிழவன் என்னும் சொல் கிராமத் தலைவனைக் குறித்தது. அயனபுரங்கிழவன் என்பவன் அயனபுரம் என்னும் கிராமத்துத் தலைவன். சங்க காலத்தில் கிழவன், கிழான், கிழார் என்ற சொற்கள் வழக்கில் இருந்தன.

(12) பண்டைக்கால ஊர்ப்பெயர்கள் பல இன்று மாறி வழங்குகின்றன என்பதற்குச் சில சான்றுகள் இக்கோயில் கல்வெட்டுக்களில் உள்ளன. அவற்றைக் கீழே காண்க

| பழைய பெயர் | இன்றுள்ள பெயர் |
|---|---|
| செம்பம் | செம்பியம் |
| நிடாம்பரம் | நெடும்பரை |
| அயநபுரம் | அயனுவரம் |
| எழுமூர் | எழும்பூர் |
| வேசாறுபாடி | வியாசர்பாடி |
| திருவான்மியூர் | திருவாமூர் |

விளங்கினர், என்று மனங்கனிந்து பாடினர் வடிவழகிய நம்பிதாஸர்.

இப்படி அரங்க நகரில் எழுந்தருளியிருந்த உடையவர் பிரதி மார்கழி மாஸமும் திருப்பாவை ஸேவையும் வ்யாக்யானமும் சிறப்பாக நடத்தி, கோயிலிலே திருவத்யயனோத்ஸவம். பொங்கல் திருநாள், தைப்பூசத் திருநாள்; மாசிப் பூச்சூடல் திருநாள். தெப்பத் திருநாள்; பங்குனி பிரம்மோத்ஸவம், சித்திரைச் செங்கழு நீலத் திருநாள், சித்ரா பௌர்ணமைத் திருவூறல் விழா தேர்த்திருவிழா, வஸந்தோற்சவம்; வைகாசி பலோற்சவம் ஜலக்ரீடோற்சவம்; ஆனித் திரு விழா, ஆடிடோலோற்சவம், ஆவணியில் திருப் பவித்ரோற்சவம்; ஸ்ரீ ஜெயந்தி விழா; கன்னி மாதத்தில் நவராத்ரி விழா; ஐப்பசித் திருநாள், தீபாவளி கார்த்திகை கைசிகபுராணக்கேள்வி விழா; கார்த்திகைத் தீபோற்சவம்; முதலிய திருவிழாக் களையும், தினந்தோறும் வரும் சிறப்பு விழாக்களையும், மற்றும்அடியார்களால்நடத்தப்பெறும் விசேஷங்களையும் குறைவற நடத்திக் கொண்டு போந்தார். ஆழ்வார் வைபவங்களும், திவ்யப்ரபந்த ஸேவையும் சிறப்பாகக் கோயிலிலே நடைபெற்று வந்தன.

இங்ஙனம் யாவும் கோலாகலமாக நிகழ அரங்க நகருள்ளார் அனைவரும் சிறப்பாக ஸ்ரீ வைஷ்ணவர்களும் உள்ளம் நிறைவு பெற்றவர்களாய் இந்நிறைவுக்கு முதற்காரணரான உடையவரை வாயாரப் பல்லாண்டு பாடிப்பரவி அவரிடத்திலே நன்றியும் பக்தியும் உடையவர்களாய் அவர் திருவடிகளை ஆச்ரயித்து மகிழ்ந்தனர் ஒரு நாள் நம்பெருமாள் ஆயிரக்கால் மண்டபத்திலே கொடை கொண்டாடி உலாவி யருளுகையில் அவ்வழகைக் கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் மிகவும் ரசித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஆழ்வான் ஆண்டவனை நோக்கி "கைப்பிடித்தொழுக என்பதான உபாய உபேயங்கள் இருக்கும் வகை என்ன?" என்று வினவினர். ஆண்டவனும் சிறிதும் தயக்கமின்றியே "பெருமாளுடைய பொருந்த விட்ட திருவடிகள் உபாயம், திருமேனி உபேயம், உசாத்துணை எம் பெருமானர், அவர் ஒழிந்த போது ஆழ்வார்கள் என்றிப்படி அடியேன் அறுதியிட்டிருப்பேன், அநந்யப்ரயோஜனர் இக்கரையிலே கிடையாமையாலே. 'ஒரு ப்ரபன்னனுடைய அத்யவசாயம் (உறுதி) க்ஷாமகாலத்திலே காணலாம். அநந்யப்ரயோஜனரை விரஜைக் கரையிலே காணலாம்! என்று கேட்டிருக்கையாலே இப்படி அநுஸந்திப்பன்" என்றருளிச் செய்தார். உடையவர் திருவடிகளை உள்ளன்போடு பற்றியவர்களின் மனநிலை, பக்குவமான முறை இது.

"மோக்ஷ இச்சையுடையனாய் ப்ரபன்னனாயிருப்பவனுக்கு இருக்கும் நாளைக்குப் பொழுது போக்கும் முறை எவ்விதம்" என்று ஒருநாள் உடையவர் திருவடிகளிலே தெண்டனிட்டுக் கேட்டார் ஆண்டான். "குருபரம்பரைப்படி த்வயத்தை அநுஸந்தானம் பண்ணுவான்" என்றார் உடையவர். உபய விபூதி நாயகனாய் திருமகள் கேள்வனாகிய சர்வேச்வரனும் நாய்ச்சிமாரும் நித்ய ஸூரிகளும் கூட வெழுந்தருளியிருக்கும் பீடக்கட்டாயிருக்கும் த்வயம் என்று உத்தரவாக்ய (ஸ்ரீமதே நாராயணாய நம: என்ற பின்வாக்ய) நிஷ்டராம்படியன்றோ உடையவர் கற்பித்தது. எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரகமும் திவ்ய விக்ரஹகுணங்களும் திவ்யாத்மஸ்வரூபமும், ஸ்வரூப குணங்களும் நித்ய முக்தர்களுக்குக் கிட்டினாற்போல முமுக்ஷுவாய் ப்ரபன்னனானவனுக்கு த்வய சரீரமே கிட்டுவதாயிருக்கும்.

உடையவருடைய சிஷ்ய கோடிகளின் ஆசார்ய பக்தி அளவிடற்கரியது. தன்னுடைய நன்மைகள் அனைத்தும் ஆசார்யன் அதீனம். அவற்றைப் பேண வேண்டிய பொறுப்பு அவனுடையது. சீடனுடையதல்ல. சீடன் அதனை நினைக்க வேண்டியதே இல்லை. குருவின் திருவடிகளைத் தஞ்சமென்று பற்றித் தன்னை அவன்பால் முற்றவும் ஒப்புவித்து விடுவதே அவன் செய்ய வேண்டியதெல்லாம் என்ற விசேஷ தர்மத்தை உணர்ந்தவர்கள் அவர்கள். இம்மனநிலையில் ஆசார்யனே அவர்களுக்கு ஸர்வமும். ஒரு உத்தம பதிவ்ரதைக்குக் கணவன்தான் தெய்வம் என்பது போன்று சீடர்களுக்கு ஆசார்யர்தான் தெய்வம். இக்கோட்பாட்டை அதன் எல்லை நிலம் வரை கொண்டு சென்ற ஒரு சீடரின் சரித்திரம் இது.

எம்பெருமானரின் மிக அந்தரங்க சீடர் வடுக நம்பி. அதனாலேயே எம்பெருமானாருக்கு சிஷ்யாநுவர்த்தனம் செய்ய வெண்ணிய திருக்குறுங்குடி "நம்பியெம்பெருமான்" வடுகநம்பியாக வந்து சிஷ்ய விருத்தி செய்தது. இவ்வடுக நம்பி ஒருநாள் எம்பெருமானர் இரவில் அமுது செய்வதற்காக அடுப்பிலே வைத்துப் பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். அன்று கோயிலில் உற்சவ தினமாதலின் நம்பெருமாள் நன்கு உடுத்து முடித்துப் பூண்டு பொறுத்துப் பூசிப்புலர்த்தி அழகாக ஒப்பனை செய்யப் பெற்றவராய் வீதியுலா வருபவர் உடையவர் திருமடத்து வாசலுக்கு எழுந்தருளினர். உள்ளே அடுத்த கட்டிலே எழுந்

தருளியிருந்த உடையவர் பெருமாள் எழுந்தருள்வதை உணர்ந்து அங்கிருந்தபடியே உள்ளேயிருந்த வடுக நம்பியை நோக்கி 'வடுகா! வாசலிலே நம்பெருமாள் புறப்பாடு கொண்டருளுகிறார். நாம் போகிறோம், நீயும் வா! என்று கூறிவிட்டு வெளியே சென்றார். அங்கே நம்பெருமாளது ஒப்பனையழகை நன்கு அநுபவித்து ஸேவித்து, வடுக நம்பி வந்தாரா, என்று திரும்பிப் பார்த்தார். காணவில்லை. பெருமாளும் உடையவரை விசேஷ கடாக்ஷம் செய்து ப்ரஸாதம் அருளி அப்பால் செல்ல உடையவரும் மடத்தினுள் சென்றவர் வடுகநம்பி அடுப்படியில் காயும் பால் முன்னே அமர்ந்திருக்கக் கண்டார். தாம் அநுபவித்த அழகிய மணவாளன் ஸேவையை வடுக நம்பி ஸேவிக்கவில்லையே என்ற பரிவு அவருக்கு. "வடுகா நாம் சொல்லிப் போனோமே! நீ வரவில்லையே! இன்று நம்பெருமாளின் ஒப்பனை ஸேவையை இழந்து விட்டாயே, அப்படி என்ன? என்று அன்பு ததும்பக் கேட்டார். வடுக நம்பியோ ஒன்றும் இழந்ததாகக் கருதினதாகத் தோன்றவில்லை. நிதானமாக உடையவரை நோக்கி "உம்முடைய பெருமாளை ஸேவிக்க வந்து விட்டால் எம்பெருமாள் அமுது செய்யவேண்டிய பால் கும்பிப்போகுமே!" என்று பதிலிறுத்தார். கேட்ட உடையவர் திகைத்துப் போனார். "பெருமாள் ஸேவையும் த்யாஜ்யம் என்னும் படியான ஆசார்ய பக்தியா, நம்பிக்கு நம்மிடம்!" என்று உள்ளே வியந்தார். ஒன்றும் பேசாது இருந்து விட்டார். வடுகநம்பியின் நிலை ஆசார்ய பக்தியின் பராகாஷ்டை (உச்ச நிலை) அதனாலன்றோ பின் ஆர்த்திப்ரபந்தம் அருளிய வாக்விசத சிரோன் மணியாகிய மணவாளமாமுனிகள்.

> "உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா
> மன்னு புகழ்சேர் வடுகநம்பி—தன்னிலையை
> எந்தனுக்கு நீதந் ததிராச எந்நாளும்
> உந்தனக்கே ஆட்கொள் உகந்து"

என்று வடுக நம்பியின் சீடநிலை தமக்கும் வாய்க்க வேண்டும் என வேண்டினார்? கூரத்தாழ்வான் முதலியாண்டான் இருவரும் 'இருகரையர்' என்னும்படி உடையவர் அருகே அத்தாணிச் சேவை செய்தார் வடுக நம்பி. ஒருக்கால் எம்பெருமானார் கோஷ்டியிலே எல்லோரும் எழுந்தருளியிருக்க அங்கே ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் ஸேவித்து நின்று குருபரம்பராபூர்வகமின்றியே திருமந்த்ரத்தை உச்சரிக்க அங்கு நின்ற வடுகநம்பி குருபரம்பரைப்படியின்றிச் செய்த இது "நாஅகாரியம்" (நாவினால் செய்யத்தகாத காரியம்) என்ற சொல்லி அங்கிருந்து எழுந்து போய் விட்டார். இச்சரிதங்கள் எல்லாம் உடையவர் எவ்வாறு தம் சீடர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருந்தார் என்பதை விளக்குவன.

இத்தகைய மனப்பாங்கை வளர்த்து வந்த சீடர்களில் மிகவும் முக்கியர்களான ஆழ்வான் ஆண்டான், அருளாளப் பெருமாள், எம்பெருமானார், ஸ்ரீ கோவிந்தப் பெருமாள் என்ற எம்பார், திருக்குருகைப்பிரான் பிள்ளான், நடாதூர் ஆழ்வான் இவர்கள் போல்வாரில் ஆழ்வானை தமக்குத் தாழ்வாகப் பின் சென்று நடக்கும் தாளிணைகளாகவும், ஆண்டானை அடிகாக்கிற அடியாகவும், தம் திருவுளக்கருத்தறிந்து தம்மைப் பிரியாதிருக்கும் எம்பாரைத் திருவடிநிழலாகவும், அருளாளப் பெருமாள் எம்பெருமானாரை அவர் 'ஞானஸாரம்' 'ப்ரமேயஸாரம்' என்ற இருப்ரபந்தங்கள் மூலம் எம்பெருமானார் திருவுளக்கருத்தை வெளியிடுகையாலும் அவரைத் தம்முடைய பேரருளாளர் திருவாராதனத்துக்கு அங்கமாக்குகையாலும் அவரை ஆத்ம (தம்மோடு) ஸமமாகவும், பிள்ளையுறங்கா வில்லி தாஸரை அவர் எம்பெருமானாரைப் பரிந்து நோக்குகையால் தமது திருக்கைகளாகவும், மற்றும் பெரிய நம்பி தடக்கமான தம்முடைய ஐந்து தலைகளாகவும் தாம் ஐவாயரவின் அவதாரமாதலின்), ஆழ்வார் திருநாமம் சாத்துகைக்குப் பாங்காகத் தம்மைக் கொடுத்த திருக்குருகைப் பிரான் பிள்ளானைத் தம்பிள்ளையாகவும் அபிமானித்து வேதாந்த சாஸ்த்ரங்களைத் தெளிய உபதேசித்துப் போந்து வந்தார் எம்பெருமானார்.

—தொடரும்

# பாடகத்தின் பாண்டவ தூதர்

(திரு. கே. ஆர். இராஜகோபாலன், B. Sc. (Hons.), தாம்பரம்.

நம் நாட்டின் பண்டைக் கல்விக் கூடங்களுள் காஞ்சி மாநகரமும் ஒன்றாகவிருந்தது. பல்லவர் காலத்தில் இது மிகப் பெருமை வாய்ந்த பட்டணமாகத் திகழ்ந்தது. அந்நாளைய ஸம்ஸ்கிருத கவிஞர்களுள் ஒருவரான **பாரவி** என்பவர்,

"பூக்களில் சிறந்தது ஜாஜிப் பூவே; ஆண்களில் சிறந்தவர் திருமால்தாம்; பெண்களில் ரம்பையே சிறந்தவள்; பட்டணங்களில் சிறந்தது காஞ்சியே."

எனப் புகழ்ந்துள்ளார். அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை காஞ்சியிற் பற்பல கோயில்கள் கட்டப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் வந்து கொண்டிருக்கின்றன. அநேக வைஷ்ணவ, சைவக் கோயில்களையும், பல ஜைன ஆலயங்களையும், மசூதிகளையும் கொண்டுள்ள இந்த நகரம், இந்நாளிலும் மிகவும் புகழ்பெற்ற ஒரு முக்கியமான தலமாக இருப்பது இதன் பல பெருமைகளில் ஒன்றாகும். தமிழ் நாட்டில் இத்தகைய தொடர்ச்சியான சிறப்பைப்பெற்றுள்ள ஸ்தலங்கள் மிகச்சிலவே என்று துணிந்து கூறலாம்.

காஞ்சியம்பதியில் பழமையும் பெருமையும் மிக்கதும், "விசுவரூபம்" என்னும் வடிவத்தில் அமைந்த மூல மூர்த்தியுடையதும், ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப் பெற்றுள்ளதுமான கோயில் ஒன்று உள்ளது என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அதுதான் பாடகத்திலுள்ள **பாண்டவ தூதப் பெருமாள்** சன்னிதி. இதன் பல சிறப்புகளைச் சிறிது கூறுவோம்.

பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் யுத்தம் உண்டாவதைத் தன்னால் இயன்ற வரையில் தடுப்பதாகக் கூறிக் கண்ணபிரான் அஸ்தினபுரம் செல்ல ஆயத்தமாகிறார். தருமர் கடைசியாக, "ஐந்து கிராமங்கள் கிடைத்தாலும் போதும்; நாங்கள் திருப்தி அடைவோம்; எப்படியேனும் சமாதானமே ஏற்படும்படி செய்ய வேண்டும்" என இறைஞ்சிக் கண்ணனுக்கு விடை தருகிறார். ஆனால் அங்கு அஸ்தினபுரத்தில் துரியோதனன், "எப்படியும் பாண்டவர்கட்கு ஒரு ஊசி முனை நிலங்கூடத் தரமுடியாது" என்ற வீராப்போடு உள்ளான். மற்றும் கண்ணபிரான் வந்தால் அவரை அவமானப் படுத்தி இம்சிக்கவும் ஏற்பாடுகள் செய்து விடுகிறான். தனது சபையின் மண்டபத்தில் ஒரு பெரிய நிலவறையைத் தோண்டுவித்து, அதன் உள்ளே ஆயுதங்கள் தாங்கிய அநேகம் வீரர்களை இருக்கவைத்து, மற்றவர்கள் அறிந்துகொள்ள முடியாதபடி மெல்லிய மூங்கிற் கழிகள் கொண்டு அப்படுகுழியை மறைத்துவிட்டு, அதன்மேலே சிறந்த ஆசனம் ஒன்றை அமைத்து வஞ்சக எண்ணத்துடன் கண்ணபிரானை அதன்மேல் அமரச் சொல்லுகின்றான் துரியோதனன். கண்ணபிரான் அவ்வாறே அவ்வாசனத்தின்மேல் ஏறி அமர்ந்ததும், மூங்கிற் கழிகள் முறிபட்டு விழுந்தன. கண்ணபிரான் உடனே விசுவரூபம் எடுத்துப் பிலவறையில் இருந்த மல்லர்களையெல்லாம் அழித்தொழித்தார். துரியோதனனையும் அஞ்சி நடுங்குமாறு செய்தார். பின்னர்க் கண்ணபிரான் தன் விசுவரூபத்தைக் காட்டி அங்குள்ளோர் அனைவரையும் வியப்புறச் செய்து, கண்ணில்லாத திருதராட்டிரனுக்கும் அருட்காட்சி தருகிறார், அந்த விசுவரூபக் காட்சியை விளக்குவதாக அமைந்துள்ளதுதான் இக்கோயிலின் மூர்த்தம். திருமங்கையாழ்வார்,

"அரவு நீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை
அஞ்சியிடாதேயிட அதற்குப் பெரிய மாமேனி
அண்ட மூடுருவப் பெருந்திசை அடங்கிட
நிமிர்ந்தோன்.........

என்று இங்குள்ள விசுவரூப மூர்த்தம் குறித்துப் பாடியிருப்பது காணலாம்.

இத்தலம் நான்கு ஆழ்வார்களின் பாசுரங்களில் இடம் பெற்றுள்ளதெனின் அதன் பழமையும், பெருமையும் நன்கு தெளிவாகும். அப்பாடல்களைக் கீழே காணலாம். "**பாடகம்**" என்ற சொல்லை **பாடு + அகம்** என்று பிரித்து, "பெருமையான தோற்றமுடைய எப்பிரான் எழுந்தருளியுள்ள இடம்" என்று கூறுவர். **பாடு**-பெருமை. **அகம்**-இடம், கோயில்.

1. சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம்
நேர்ந்தவென் சிந்தை நிறைவிசும்பு வாய்ந்த
மறை **பாடகம்** அனந்தன்வண்டுழாய்க்கண்ணி
இறைபாடி யாய இவை.

—பேயாழ்வார்

2. உற்று வணங்கித் தொழுமின் உலகேழும்
முற்றும் விழுங்கும் முகில் வண்ணன்— பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து பூம் **பாடகத்தின்**
இருந்தானை யேத்துமென் னெஞ்சு.

—பூதத்தாழ்வார்

3. நின்றதெந்தை யூரகத்திருந்த தெந்தை **பாடகத்து**
அன்றுவெஃக ணைக்கிடந்த தென்னிலாத முன்னெலாம்
அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்
நின்றது மிருந்ததும் கிடந்ததுமென் னெஞ்சுளே......

— திருமழிசையாழ்வார்

4. கல்லார் மதிள் சூழ் கச்சி நகருள் நச்சிப் **பாடகத்துள்**
எல்லாவுலகும் வணங்க விருந்த வெம்மான் இலங்கைக்கோன்
வல்லாளாகம் வில்லால் முனிந்தவெந்தை விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லின் நமோ நாராயணமே.

—திருமங்கையாழ்வார்

இத்தலத்திற்கென்றே தனியாகத் தல புராணம் என்ற நூல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தாயார் பெயர் : **ருக்மணிதேவி**. விமானம் **சக்கர விமானம்** தீர்த்தம் : **மத்ஸ்ய தீர்த்தம்**.



பாண்டவதூதர் கோயில் தோற்றம்

இக்கோயில் சுமார் கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் கட்டப்பெற்றிருக்கலாம் என்று ஆராய்ந்துள்ளனர். கண்ணன் திருவுருவம் கல்லாலானதன்று—சுதையினுல் (சுண்ணும்பால்) செய்யப்பட்டது. எனவே, திருமஞ்சனம் முதலியன கிடையாது; சாம்பிராணித் தைலத்தினுல் தைலக்காப்பு மட்டும் உண்டு. திருவுருவம் அரியாசனத்தில் வீற்றிருக்கும் திருக் கோலத்தில் எழுந்தருளியுள்ளது. சுமார் 20 அடிக்கும் மேலான உயரமும், மிகுந்த கம்பீரமும் கொண்ட அழகிய திருமேனி. ஒருகால் மடிந்து பீடத்தில் அமர, மற்ருென்று கீழ்நோக்கி யுள்ளது. இரண்டே கைகள் தாம்—ஒன்றில் அபய முத்திரை, மற்ருென்றில் வரதமுத்திரை. மூல விக்கிரகத்தின் உருவம் முழுவதும் பூக்களாலானதைப் போலச் செதுக்கப் பட்டுள்ள அழகின் சிறப்பினை, இறை அன்பர்கள் யாவரும் கண்டு இன்புற வேண்டும்.

கோயிலைச் சுற்றியுள்ள கற்கட்டடங்கள், உருண்டையான விமானம் முதலியன, சோழர் காலத்தில் கட்டப்பட்டவை. கோயிலின் தென் சுவரிலும் வட சுவரிலும் கல்வெட்டுகள் உள்ளன. முதலாவது, சோழ ராஜசேகர வர்மன் என்னும் **முதற் குலோத்துங்க சோழன்** (கி. பி. 1070—1120) ஆட்சியில் 39ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட நன் கொடையினைக் கூறுகின்றது. வட சுவரில் அதே மன்னனின் 5ஆம் ஆண்டு ஆட்சி யில் மானியமாக ஒரு பூந்தோட்டம் அளிக்கப் பெற்ற செய்தி யுள்ளது. (தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி, எண் 68, 74.)

முன்புறமுள்ள பெரிய மண்டபம், தாயார் ஸன்னிதி, முன் கோபுரம் முதலியன பிறகே தோன்றியிருக்க வேண்டும். கோபுரத்தைக் கடைசியாகச் செப்பனிட்டவர், கோயில் தர்மகர்த்தாவான **இராமானுஜாச் சாரியார்** (தி. வி. ரங்காச் சாரியாரின் குமாரர்) என்பதும், செப்பனிட்ட ஆண்டு கலி 4996 (1894-5) என்பதும் கோபுரத்தின் அடித்தளத்திலுள்ள ஒரு சிறு இந்திக் கல்வெட்டால் தெரியவருகின்றன. கலி 4999-ல் (1897-8) இப்பொழுதுள்ள துவஜஸ்தம்பம் நாட்டப் பட்டதாம்.

சென்ற ஆண்டு காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் பல தடவைகள் இந்த ஸன்னிதிக்கு வருகை தந்தார்கள் என்றும், அப்போது அவர்கள் இந்நெடிதுயர்ந்த திருமேனியின் அழகைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார் என்றும் அறிகிருேம். விசுவ ரூபத்தைக் குறிக்கும் இக்கோயிலில், "கிருஷ்ணன் தூது" என்ற பொருளைப் பற்றிச் சொற்பொழிவொன்று ஏற்படுத்தி, அது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது தாமே அங்கு வந்து, சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தாராம். ஆச்சாரிய சுவாமிகளின் ஆக்ஞையின் பேரில் மூலவருக்கு 30 முழ நீளமும், 9 முழ அகலமும் உள்ள அகிம்சைப் பட்டு வஸ்திரம் அளிக்கப்பட்டது. அது இன்று பகவானின் திரு மேனியை மேலும் கவர்ச்சியாக்கியுள்ளதைப் பக்தர்கள் காணலாம்.

இத்தலத்திற்கு மற்றுமொரு சிறப்புண்டு. எம்பெருமானுர் எனப்படும் **ஸ்ரீ இராமாநுஜர்** ஏற்றுப் போற்றியருளிய முக்கிய சீடர்களுள் **அருளாளப் பெருமாள் எம்பெருமானுர்** என்பவரும் ஒருவர். இவர் பல கிரந்தங்களை இயற்றியுள்ளார், மற்றும் பல மஹான்களுக்கு ஆசார்யனுகவும் விளங்கினுர் என்பதனைக் "குருபரம் பரைப் பிரபாவத்தில்" காணலாம். இவ்வாசார்யனுக்கு இக்கோயிலில் ஒரு தனிச் சன்னிதியும் உள்ளது; ஆண்டு தோறும் சிறப்பாக உத்ஸவமும் நடைபெறுகின்றது. இவரைத் தலைவராகக் கொண்டுள்ள **விஞ்சி மூரார்** வம்சத்தினர் தாம் இன்று இக்கோயிலை நிர்வகிக்கின்றனர்.

ஸ்ரீ ஏகாம்பரேசுவர் ஆலயத்திலிருந்து சுமார் அரை மைல் தொலைவில் உள்ளதும், 108-வைஷ்ணவத் திருப்பதிகளுள் ஒன்ருனதுமான இவ்வாலயம், யாவரும் சேவித்து இன்புறவேண்டியதாகும். *



கல்லங்குறிச்சி—ஸ்ரீ கலியுக வரதராஜப்பெருமாள் கோயில் பெண்கள் உயர்நிலைப்பள்ளியின் கட்டிடக் கல்நாட்டு விழாவில், தமிழக முதலமைச்சர் திருமிகு எம். பக்தவத்சலம் அவர்கள் கலந்துகொள்ளுதல் (23—8—65)

## பொருள் அடக்கம்


1. முருகனின் ஆறுபடை வீடுகள்
2. திருவெழு கூற்றிருக்கை (உரை)
3. திருவாசகத்தின் சிறப்பியல்புகள் சில
4. திருப்புகழ் அமிழ்தம்
5. தெய்வம் தெளிமின் : தெளிந்தோர்ப் பேணுமின்
6. அறநிலையங்கள் ஆற்றும் பணிகள்
7. விடை தெரியுமா ?
8. மதிப்புரைகள்
9. பாரதப் பண்போவியங்கள்
10. விடை விளக்கம்
11. திருவல்லிக்கேணிக் கல்வெட்டுக்கள்
12. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
13. பாடகத்தில் பாண்டவ தூதர்



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.